உ

சிவமயம்

# கண்ணகியம்மன் காவியமாலை



ஆக்கியோன்

திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி

(குடாநீரூரான்)

க






உ

சிவமயம்

# கண்ணகியம்மன் காவியமாலை



வற்றாப்பளை



நாகர்கோவில்





வதிரி
உல்லியனொல்லை



குடத்தனை

ஆக்கியோன்

**திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி**

(குடாநீரூரான்)

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : கண்ணகியம்மன் காவியமாலை |
| நூலாசிரியர் | : திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி (குடா நீரூரான்) |
| முகவரி நிரந்தரம் | : குடாரப்பு, நாகர்கோவில் |
| தற்போதய முகவரி | : 'சிவ பவனம்', மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி, கரவெட்டி. |
| உரிமை | : நூலாசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : 2012 ஐப்பசி 21 |
| பிரதிகள் | : 750 |
| பக்கங்கள் | : 70 |
| பெறுமதி | : 100/= |
| பதிப்பகம் | : தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. |
| அட்டைப்படம் | : மந்திகை கண்ணகை அம்மன் |

# பொருளடக்கம்


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசியுரை | |
| 2. | கருத்துரை | |
| 3. | என்னுரை | |
| 4. | சாற்றுகவி 1 | |
| 5. | சாற்றுகவி 2 | |
| 6. | சாற்றுகவி 3 | |
| 7. | காப்பு | 1 |
| 8. | கடவுள் வாழ்த்து | 2 |
| 9. | விருத்தம் (கண்ணகியம்மன் கோவில்கள்) | 5 |
| 10. | அவையடக்கம் | 6 |
| 11. | முன்வினைச் சருக்கம் | 7 |
| 12. | மாநாகர் மகளான சருக்கம் | 12 |
| 13. | மணவினைச் சருக்கம் | 17 |
| 14. | மாதவி சூழ்வினைச் சருக்கம் | 25 |
| 15. | சிலம்புகூறல் சருக்கம் | 34 |
| 16. | கொலைக்களச் சருக்கம் | 45 |
| 17. | உயிர் வருக்கச் சருக்கம் | 50 |
| 18. | வழக்குரைச் சருக்கம் | 53 |
| 19. | அதிசய / அற்புத சருக்கம் | 60 |
| 20. | வணங்கு சருக்கம் | 67 |
| 21. | வாழ்த்துச் சருக்கம் | 69 |

அம்மன் துணை

# திருப்பணிச்செல்வரின் ஆசியுரை

ஐம்பெரும் காப்பியங்களிலொன்றான சிலப்பதிகாரத்தை படைத்தவர் இளங்கோ அடிகளார். அவருடைய பாடல்களில் வரும் சில கருத்துக்கள் பிற்காலத்தில் குடாரப்பு வெற்றிவேலுச் சட்டம்பியாரின் கோவலனார் கதையில் வரும் பாடல்களில் சில கருத்து வேறுபாடுகள் காணப்படுவதாக எமது மூத்தோர் கூறியுள்ளனர். எது எப்படியிருப்பினும் கண்ணகி ஓர் கற்புக்கரசி என்பதையும் ஒரு தெய்வம் என்பதையும் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். நிற்க. தற்போது வெற்றிவேலு சட்டம்பியாரின் வழித்தோன்றலான பசுபதி அவர்கள் குடாநீரூரான் எனும் புனைபெயரில் கண்ணகியம்மன் காவியமாலை என்னும் நூலை எழுதியுள்ளார். வெற்றிவேலரால் இருநூற்றி அறுபது பக்கங்களில் பாடிய பாமாலையைச் சுருக்கமாக எழுபது பக்கங்களில் பாடியுள்ளார். கோவலனார் கதையில் வரும் அத்தனை விடயங்களையும் முறையே அவையடக்கம், முன்வினைச்சருக்கம், மாநாகர் மகளான சருக்கம், மணவினைச் சருக்கம், மாதவி சூழ்வினைச் சருக்கம், சிலம்புகூறல் சருக்கம், கொலைக்களச் சருக்கம், உயிர் வருக்க சருக்கம், வழக்குரைச் சருக்கம், அதிசய அற்புதச் சருக்கம், வணங்கு சருக்கம், வாழ்த்துச் சருக்கம் என பதினொரு சருக்கங்களாக மிக சுருக்கமாக எழுதியுள்ளார். இவரின் இம்முயற்சி இன்றுள்ள இளம் சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாக அமையட்டும். இந்நூலை எமது மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தில் வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுபம்

வீ. சிவஞானஸ்கந்தமூர்த்தி (அரசண்ணா)
திருப்பணிச்செல்வர்
மந்திகை கண்ணகை அம்மன் ஆலய
திருப்பணிச்சபைத் தலைவர்

2012.09.06

# கல்விச் செயலாளரின் கருத்துரை

## உயர்ந்த சமய சமூகப் பணியாளன்

காக்கும் தெய்வம் கண்ணகி அம்பாளின் சிறப்புக்களையும் வரலாற்றுப் பெருமைகளையும் அற்புதங்களையும் கண்ணகியம்மன் காவியமாலை என்னும் நூலுருவில் வடித்து மிகவும் உயர்வான பணியினை திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி அவர்கள் நிறைவு செய்துள்ளார். அரசசேவையில் பிரதேச சபை செயலாளர், உதவி அரசாங்க அதிபர் போன்ற உயர் பதவிகளை வகித்து சிறந்த முறையில் தனது கடமைகளை ஆற்றியதுடன் பல்வேறு சமய பணிகளையும் சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருவது பாராட்டத் தக்கதாகும். இந் நூலாசிரியரின் படைப்புக்களான நாகர்கோவில் நாகதம்பிரான் மான்மியம், நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் புகழ்மாலை என்பன பெறுமதி வாய்ந்த ஆவணப் பதிவுகளாகவும் வரலாற்று பொக்கிஷங்களாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு என்பவற்றில் தனது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதுடன் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் சிறந்த மரபுவழி கவிஞராகவும் காத்திரமான பட்டிமன்ற பேச்சாளராகவும் தன்னை வெளிப்படுத்தி பல்துறை ஆளுமை கொண்ட சாதனையாளனாக உயர்ந்து தனக்கும் தான் பிறந்த மண்ணிற்கும் பெருமையினை தேடித்தந்துள்ளார். இவரின் சமய, சமூக பணிகள் தொடரவும் தனது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இன்னும் நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல கண்ணகி அம்பாளின் அருட்காட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சி. சத்தியசீலன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்

# என்னுரை....

சைவ தமிழ் உலகத்தினருக்கு என் வணக்கங்கள்.

கண்ணகியம்மன் காவிய மாலை என்ற இச் செய்யுள் நூலை செய்யவேண்டும் என்று என் உள்ளத்தெழுந்த ஆசையை பூர்த்தி செய்துதவிய விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்குகின்றேன்.

ஐம் பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகார கதையினையும் குடாரப்பு வெற்றிவேலுப் புலவர் பாடிய கோவலன் கதை என்ற ஏட்டு நூலையும், கோவலன் கண்ணகி நாட்டுக் கூத்துக் கதையையும் ஆராய்ந்து சுருக்கியும் புதுக்கியும் சைவ முறை மேலோங்கி நிற்பவும், அம்மனின் அருள் கடாட்சம் நான் கேட்டு அறிந்த அதிசயம் அற்புதங்களைக் கூட்டியும் செய்யுள் வடிவாக்கி கண்ணகி அம்மன் அடியார்களில் காலடியில் வைக்கச் செய்த அன்னையின் திருவருளை எண்ணி வியந்து பணிந்து மகிழ்கின்றேன்.

கண்ணகியம்மன் கோவில்களில் பொங்கல் தினத்தோடு எட்டு நாட்களும் பக்தியுடன் படிக்கப்படும் கோவலன் கதைப் பாடல்கள் கொண்ட ஏடுகள் ஏனைய நாட்களில் எவரும் திறந்து பார்க்கக் கூட இடமளிக்கப்படாமல் தெய்வத்துக்கு சமானமாகப் பாவிக்கப்பட்டு புனிதமாக பாதுகாக்கப்பட்டு வந்தது நீங்கள் அறிவீர்கள். இவ்வாறு கோவில்களிலே கட்டி வைக்கப் பெற்ற ஏடுகளில் பெரும்பகுதி சிதைவடைந்து மறைந்துள்ளன. (தற்போது புத்தக வடிவில் கோவில் நிர்வாகிகள் சிலர் பதிப்பித்தும் உள்ளனர். இது வரவேற்கத்தக்க ஒன்றாகும்) அழிந்துபோன கோவலன் கதைப் பாடல்களின் சாரமே இந்நூலாகும்.

இந்த நூலை எழுதுவதற்கும், வெளியீடு செய்து அடியார்கள் கைகளில் கொடுப்பதற்கும் அம்மாளின் அருளேயன்றி வேறொன்றில்லை. அவளே என்னை ஆட்படுத்தி இப்பணியை

செய்வித்தாள். ஆதலால் கண்ணகியம்மன் அடியார்கள் அனைவருக்கும் இந்நூலை காணிக்கையாக்கி அன்னை பாதத்தில் வைத்து வணங்குகின்றேன்.

இந்நூலுக்கு ஆசியுரை, கருத்துரை, சாற்றுகவிகள் வழங்கிய அறிவுசால் அன்புள்ளங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் என்றும் உரியன.

நான் எழுதும் புராண நூல்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் அடியார் கூட்டம் அனைவருக்கும் இந்த நூலை வழமைபோல ஒப்புநோக்கி எழுத்துப் பிழைகளை திருத்தி உதவிய எனது மைத்துனர் திரு. பொ. ஸ்ரீராமச்சந்திரன் அவர்கட்கும் திறம்பட அச்சுவாகனத்தமர்த்திய நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தினருக்கும் இந்த நூலை மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தில் வெளியீடு செய்வதற்கு உதவிய ஆலயத் தலைவர் திருப்பணிச் செல்வர் உயர்திரு வீ. சிவஞானஸ்கந்தமூர்த்தி ஐயா அவர்களுக்கும் கண்ணகை அம்மனின் அருட்கடாட்சத்தை வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"அம்மன் திருவடிகள் வாழ்க"
"என்கடன் பணி செய்து கிடப்பதே"
நன்றி, வணக்கம்

திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி
(குடாநீருரான்)

குடாரப்பு
நாகர்கோவில்
2012.09.01.

# கண்ணகியம்மன் காவியமாலைக்கான சாற்றுகவி

## பருத்தித்துறை பிரதேச செயலாளரும் கவிஞருமான உயர்திரு. இ. த. ஜெயசீலன் அவர்கள் வழங்கியது

கற்பினைக் கனலே ஆக்கி
கவினுறு மதுரை தீய்த்த
அற்புதத் தெய்வக் காதை
அதை இந்த உலகும் உய்ய
நற்கவி கொண்டு பாடி
நல்கிடும் குடாநீரூரான்
கற்பனைத் திறனைக் கண்டோம்!
கவியுடன் கரைந்தே போனோம்!

எந்தெந்தச் சொல்லை எங்கே
எடுத்தெழுதிடுதல் வேண்டும்,
எந்தெந்த எதுகை மோனை
எங்கு இட்டால் எழிலும் கூடும்,
எந்தெந்தச் சந்தம்.... எந்த
உணர்ச்சியை மெருகு ஏற்றும்,
இந்நுட்பம் தெளிந்து இன்று
இவர் செய்தார்.... 'கற்பின் வேதம்!'

புதிய சொல் புதிய பார்வை
புது உத்தி, இவற்றை யாப்பு
விதியுடன் கலந்து.... கற்றோர்
வில்லங்கம் என்று விட்ட

அதியுயர் காவியத்துள்
அடக்கி 'அறத்தீயின்' வாழ்வைப்
புதுமையாய்ச் சமைத்துத் தந்தார்!
புசித்து ஆன்மப் பசியைத் தீர்ப்போம்!

இடைவிடா தெங்கள் சைவ
இலக்கிய மரபைக் காக்கப்
படைக்கிறார் காவியங்கள்
பலபக்தி நூல்கள்.... இன்றை
நடைமுறை நாக ரீக
நாளிலும் குடாநீரூரான்!
தொடர்க இப் பணியை, தெய்வம்
துணைநிற்கும்.... உயர்க.... வாழ்க!

பிரதேச செயலகம், அன்புடன்
பருத்தித்துறை. இ. த. ஜெயசீலன்
24.08.2012.

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்
உயர்திரு. வ. ஆ. தங்கமயில் அவர்கள் வழங்கிய

# சாற்றுகவி

கடுகு துளைத்துக் கருபல புகுத்தி
வடித்த வழக்குரை வாழ்க!

களியைக் களியாற் கடைந்து கக்கும் ஒளியை வன்னிக்
களிப்பில் கரும்புக்
களியைப் பிழிந்து கட்டி வெல்லப் பாகு திரட்டும்
கணிப்பிற் கைதேர்ந்து
புளிப் பகற்றிப் புதுப்பித்துப் புரிந்த பத்தினி வழக்குரைப்
பனுவல் படிப்போர்
தெளிதேறற் தித்திப்பில் திவ்ய முத்தி 'ஊழ் அறம் கற்பு'
தெரிக்கும் தேவாமிர்த
ஒளிர்பா மாலை ஓதிய ஒப்பில் பசுபதி நாமத்தன்
ஒருங்கிணைத்த முன்னவர்
களிப்பின் கருத்துப் பிறழாது கண்ணெனப் போற்றி செய்
காதை வாழி! யாத்தோன் வாழி!!

கண்ணகி வழக்குரை கண்ட நூல்கள்
கண்ணாய்ப் போற்றிக் கருத்துட் தேக்கி
நுண்மாண் நுளைபுல நுண்பொருள் ஆய்ந்து
பண்ணிய பனுவல் பாடிய பசுபதி
எண்ணிய எண்ணம் ஏற்பார் ஏற்றமாய்
மண்ணில் மலர்ந்தது, மரபு வாழாஅ
வண்ணம் கண்டேம் வாழ்த்தும்
எண்ணம் எழுந்தது என்றும் நிலைக்கவே.

மாலிசந்தி,
வதிரி,
கரவெட்டி.

இவ்வண்ணம்
அன்புடன்
வ. ஆ. தங்கமயில்

# தென்புலத்தார் ஆசியுரை

## குடாரப்பு வெற்றிவேலுப் புலவர் அருளியது

## (விருத்தம்)


## சாற்றுகவி

அன்று தொட்டின்றளவும் அடியேனை ஆழ்கின்ற
அருளுக்கு அளிக்கும் உதவி
ஆனதொன்றில்லை எந்நாளும் என்மனதில்
ஆசை கொண்டுறுவதற்காய்
இன்று தொட்டிடுகாதை முறை விரித்தே சொன்ன
இதுவும் உன் அருளில் ஒன்றே
ஏகாந்த ரூபி கௌமாரி அருளானந்த
இறையவன் இடக் கொழுந்தே
மன்றுளாடிய பரமன் அருளும் உன் அருளும் என்
மனமலையில் நடமாடியே
வாழ்வுதவியே முத்தி நாளுதவியே யென்றும்
வழித் தொண்டளித் தருளுவாய்
என்றும் மாநிலம் புகழ இக்கதை பரப்பியே
யாவரும் மகிழ அருள்வாய்
ஏதமுறு தூவினில் மேவு பிரகாசியே
இறைவி கண்ணகியம்மனே.

(எனது முன்னோர் பரம்பரை குடாரப்பு வெற்றிவேலுப் புலவர் பாடிய "கோவலனார் காதை" என்ற ஏட்டுப் பிரதியிலிருந்து பெறப்பட்டது)
நா.ஆ.



மட்டுவில்



அறத்தி



அத்துளு



சுட்டிபுரம்

உ
சிவமயம்



## காப்பு - விநாயகர்

கந்தனுக்கு மூத்தவனே கரிமுகத்து தூமணியே
சிந்தும் சிவ மகனே சிறப்பொற்றைக் கோட்டுடையாய்
செந்தமிழால் கண்ணகியார் சீர்காதை செப்புதற்கு
முந்தும் மனத்திடையே முன்னவனே காப்பாவாய்.

## காப்பு - கண்ணகியம்மன்



கொங்கதின் செல்வி குடமலைமாதா குதிர் கனகம்
தென்தமிழ் பாவை சீர்தவக் கோடு செறி சிலம்பாள்
மங்கிடா முத்து மாணிக்க நீலம் மரகதமாய்
தங்கிடா தெய்வ தற்பரை தாயை தாழ்குவமே.

தாரமாய் மகளுமாகி தண் சோழநாடு புக்கு
வீரமாய் தெய்வமாகி வினைமாறன் மதுரை தீய்த்து
சேரனின் சிலையெடுப்பில் சிறந்துமே இலங்கை நண்ணி
பேருரு காட்டி யாண்ட பெய்சிலம்(பு) பதங்கள் போற்றி.

# கடவுள் வாழ்த்து



## விநாயகர் துதி

ஒற்றை மருப்பும் ஓங்கி ஒளிர் துதிக்கையும்
மற்றக்கர நான்கும் மார்பசையும் புரிநூலும்
சுற்றும் அரைஞாணும் தொந்தியுறு பெருவயிறும்
கற்றைக் கதிராரும் கரிமுகனைக்கை தொழுவாம்.
1

## உமாதேவி துதி



பேர் பரவு மீனாட்சி விசாலாட்சி காமாட்சி பிறங்கு கௌரி
சேர் பரமனிடத் தாள் பவானி அம்பிகையோடு மலைமடந்தை
தாரு பவதாரிணியே, பராசக்தி துர்க்கையுடன் காளியாகி
நாரணி மனோன்மணியாம் நற்தேவி சாம்பவியை நாடுவாமே.
2

## கண்ணகி அம்மன் துதி



கற்பினை கனலேயாக்கி கவினுறு மதுரை தீய
கொற்றவன் புரண்டு வீழ குலமுறை அமைச்சர் சாய
செற்றமே வடிவதாகி சிலம்பதை யுடைத்து நீதி
சொற்றியே சோதியான தூய கண்ணகையே போற்றி.

3

## நாகதம்பிரான் துதி



நதிகாட்டும் திருமுடியும் நடமாடும் பதமலரும் நஞ்சையுண்டு
துதிகாட்டும் திருமிடறும் துணையான பெண்வடிவும் துடியும் தோலும்
விதிகாட்டும் விடையேறி வீதிவலம் வந்து எம்வினையை போக்கும்
பதிகாட்டும் நாகநகர் பண்ணவனின் பாதங்கள் பணிதல் செய்வாம்.

4

## முருகையா துதி



முன்னை மான்மகளாகி முறையாக உனைச்சேர உள்ளம்வைத்து
பின்னுமான் மகளாகி பிறங்கலில் நம்பியின் மகளுமாகி
உன்னுவாள் வள்ளியை உயர்வேட விருத்தனாய் ஊடிக்கூடி
அன்னையாய் ஆட்கொண்ட ஆறுமுகசாமியை அணைகுவோமே. 5

## சரஸ்வதி துதி



வித்தைக்கு நாயகியாய் விளங்கும் தயாபரியை
சித்திக் கொருதாயாய் சிறக்கின்ற நாமகளை
புத்திக் கொழுந்தை புலவர் நாவுற்றவளை
கற்றுக் கொடுத்தவளின் கழலைப் பணிவோமே. 6

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

கண்ணகி அம்மன் எழுந்தருளியுள்ள தலங்களில் சில

**விருத்தம்**

சீர்பூர்த்த குடாரப்பு நாகநகர் செம்பியன்
சேர் வதிரி நெல்லண்டையும்
சிங்கார மாதனை மந்திகை அல்வாயும்
சிறந் துணவ திரியாயுமாய்
பார்பூர்த்த மாளிகைத்திடலுடன் அறத்தியும்
பளை குடத்தனையுமாகி
பாங் கெழுதுமட்டுவாள் கோப்பாயும் கச்சாயும்
பகர் வரணி கரவெட்டியும்
தார்பூர்த்த அந்தணன் திடலோடு மட்டுவில்
தங்கு மருதோடை வல்வை
தட்டாத்தி கூடலும் தகு தம்பசிட்டியும்
தண் வற்றாப்பளையும் மேவி
ஊர்போற்று கண்ணகி கோவலன் காதையை
உருகியே நாங்கள் பாட
உறைந்துமே எமைக்காக்கும் ஓங்காரி சிங்காரி
ஓது கண்ணகை அம்மனே.

(மேலும் சில கோவில்கள் பக்கம் 61 பாட்டு 5, 6, 7, 8 இல் பார்க்கவும்)

## அவையடக்கம்

சிலப்பதிகார நூலில் செப்பிய சிறப்பும் கண்டு
புலப்பட எழுது வெற்றி வேலனின் கதையுமாய்ந்து
தலத்துளோர் நடித்த கூத்து நாடகமுறையும் பார்த்து
கலப்புடை கவிதையாக்கி கண்ணகி காதை செப்பும்.
1

சொற்றிடும் பாவில் உள்ள சொற்குறை, பொருளின் குற்றம்
மற்றிடு வழுக்கள் எல்லாம் மறைதெரி புலவர் காணூஉ
குற்றம(து) கொள்ளாராகி குணமதை மனதில் ஏற்று
கற்றவராகி நிற்க, கண்ணகித் தாயே காப்பாள்.
2

அன்பினால் அடியனாகி அன்னையின் தொண்டனாகி
முன்கதை புனைந்த வெற்றிவேலனின் மரபில் வந்தோன்
என்பதால் எழுதும் பாடல் ஏற்றிடு வீர்கள் என்று
நம்பியே வரைகின்றேனே, நாயகி பாதம் நண்ணி.
3

அந்தமில் அருளால் அன்னை அடியெடுத்துதவும் வாக்கால்
சிந்தும் இச் செய்யுள்மாலை சேர் வழுக்கண் டாரேனும்
வந்தணை நிலவின் மேலே வருங்குறை பலவும் பார்த்தும்
உந்திடும் குளிர்வு நோக்கி உவந்திடு தன்மை ஒப்பார்.
4

நல்முறையாக தாயின் நம்பர்கள் அடியர் வேண்டும்
எல்லையில் முடியும் என்று எழுத்தறி புலவன் போல
சொல்லிடத் தோன்று ஆசை சொல் வழிகே ளாதாகி
இம்முறை விருத்த யாப்பில் இசைந்திடு மாலையாமே.
5

பித்தனாய் பேயனாகி பேதையாய் எழுதும் பாவில்
நத்திடும் குற்றம் காணூஉ நவின்றவன் நமது அன்பன்
முத்திய தாயின் பத்தன் முத்தமிழ் வல்லரானோர்
சித்தமேற் கொள்ள அம்மை சேவடி தாளுவேனே.
6

நிலமிசை அகரம் சேர்க்க நிலையறியாத பிள்ளை
தலமுறை புராணம் செப்பதா னெழுந்திடுதற் கொப்ப
குலமுறை காக்கும் தெய்வம் குஞ்சரி சரித மாலை
சிலமுறை வகையும் தேரான் சிந்திட நினைப்பதாமே.
7

அவையடக்கம் முற்றிற்று.

## முன்வினைச் சருக்கம்

பிரமனின் மகனாய் அன்று பிறந்திடு தக்கனென்போன்
பரமனை மனதிலுன்னா பரம் பொருள் தாமேயென்ன
ஒருதனி யாகம் செய்ய, ஒன்றிய வினையும் கூட்ட
சிரசினில் நிலவு கங்கை சேர்சிவன் சினத்தனாகி
1

தக்கனின் அகந்தை போக்க தரு மகம் சாய்க்க எண்ணி
மிக்க பேருருவு கொள்ள மொய்குழல் காளியாகி
உக்கிர வடிவு கொண்டு உரும் இடிக்குலம் போலார்த்து
சுக்கு நூறாகச் செய்து சுந்தரி இருந்தகாலை.
2

சினவடிவான தேவி சிவனது வதனம் பாரா
மனதுறு கோபம் மாற்ற வகையுரை என்று கேட்க
தனமுறு புவியில் உற்ற சார் பாண்டிநாடு சென்று
இனமுறு குழுமத்தோடு எய்தி வீற்றிருப்பை என்றார்.
3

நாயகன் நவின்ற வாய்மை நற்தவ உமையாள் கேட்டு
பேயதாம் உருவினோடு பேர் பெறு பாண்டி நாட்டின்
ஆயமாம் ஆலவாயில் அணிநகர் கோயில் புக்கு
சீயமார் அணையின் மீது சேர்ந்தமர்ந்துற்றாளன்றே.
4

அன்னை ஆலயத்தைச் சேர ஐயனின் ஆணையாலே
தன்னகர் தன்னில் உள்ளார் தற்பரையான தாயை
முன்னியே பூசை செய்து முறை தவறாது போற்றி
பன்னியே நோன்பு பூண்டு பத்திமை செய்திட்டாரே.
5

சிவனையே வணங்கு மாறன் சேர் காளியானதாயை
உமையென அறியானாகி உவளகர் செய்யும் வேண்டல்
வினையென மனதிலெண்ணி விதிவிளையாட்டும் சேர
மனை இடை சேரியார்க்கு மாற்றிடும் பூசை யென்றான்.
6

ஊழது உந்தித்தள்ள உற்றமந்திரிகள் சூழ
தோள்வலி உயர்த்த மாறன் தோன்றிய தெய்வம் பாரா
வேள்வி செய்தாரை நோக்கி வெஞ்சின சுடுசொல் கூறி
மாழ்வினை யடைவீர் என்சொல் மறுத்துநீர் பூசை செய்யில்.
7

ஐயகோ யாது செய்வோம் அரச உத்தரவு மீறி
உய்வகை எமக்கு உண்டோ உறுதவ தெய்வம் பார்த்து
செய்வகை அறியாராகி, செய்பிழை பொறுத்தி என்ன
கையினை கூப்பி அம்மை காளியை தொழுதிட்டாரே.
8

உவளகர் - இடையர்

இப்படி இருக்கும் காலம் இடையரின் குலத்து நாதன்
கைப்படு செல்வமான கால்நடை மடிந்து சாக
எப்படி உய்வேன் என்று எம்தாயாள் உறையும் கோயில்
உட்படி வாசல்வந்து உருகியே வணக்கம் செய்தான்.
9

காளியை தொழுது எந்தன் கால்நடை ஆடு மாடு
மூழுறு மரணம் கொள்ளா முன்வந்து காப்பீராகில்
தாளினைப் பணிந்து உன்னை சரண்புகுந்து நாளும் தீபம்
பாழுறு கோயில் கூட்டி பற்றுடன் ஏற்றும் என்றான்.
10

ஆலவாய் கோயில் தன்னில் அமர்ந்திடும் காளித்தாயே
கோலமார் விளக்குமாக ஆயிரம் தீபம் கொண்டு
சீலமும் சிறப்பும் குன்றா சீர்கடன் செய்வேன் என்று
பாலனாம் இடையர் வேந்தன் பாதத்தில் பணிந்திட்டானே.
11

அம்மனை தொழுத காலை ஆடுடன் மாடு கன்று
இம்மெனப் பெருக்கமாக இடையர்கோன் மனமகிழ்ந்து
தம்மினத்தோடு வந்து தாயுறை கோயில் வாசல்
அம்மென விளங்கு தீபம் ஆயிரம் ஏற்றினானே.
12

நெய்யெரி தீபம் ஏற்றி நிரைமலர் இலைகள் சாத்தி
உய்வகை இதுவே என்று உவகையில் நின்ற சேதி
செய்முறை மன்னன் காதில் சீரறு குசும்பர் ஓத
கையறு வினையும் சுற்ற கடுசினம் மாறன் கொண்டான்.
13

குசும்பர் - புறங்கூறுபவர்

சினமது கொண்டமாறன் சித்தமும் பிரமையாகி
மனமதில் இடையன்தன்னோ மாற்றுவன் அரச நீதி
குணமது சற்றும் தேரா கோபமே உருவாய்க் கொண்ட
கன மழுவினைஞர் நோக்கி கட்டளை பிறப்பித்தானே.
14

கட்டளை சிரமேற் கொண்டு கடுந்தொழில் மழுவரானோர்
நெட்டழல் என்ன சீறி நீண்டெழு மழு கைக் கொண்டு
சிட்டனாய் பணியும் அன்பன் சீர் சிரம் வேறதாக
துட்டனாய் பிழந்தவேளை துணி தலை உருண்டு ஓடி
15

அம்மையே என்னை ஆண்ட அரசியே அகில மாதே
உம்மையே பணியும் தொண்டர்க்கு உறுவது இதுவோ என்று
இம்என உருண்டு ஓடி ஏந்திளை பாதம் தன்னை
உன்னியே விழுந்த தாமே உகுத்திடு குருதியோடு.
16

கேட்டனள் அபய வார்த்தை கேடில்சீர் தலையும் காலில்
மாட்டிய வேளை காளி மட்டில்லா கோபங் கொண்டு
காட்டுவன் நின்று கொல்லும் தெய்வத்தின் மேன்மை உன்னி
நீட்டிய முண்டம் சேர்த்து நிறைஉரு ஆக்கினாளே.
17

வேறு

<u>கோபாலனா</u>னவனை கோபாலன் தங்கை நோக்கி
கோமானாய் வணிகர்குல கோவலனாய் பிறப்பெடுத்து
பூபால நாயகமாம் பூம்புகார்ப் பட்டணத்தில்
மாசாத்தன் மகனெனவே வளரும் நாள் நான் வருவேன்.
18

கோபாலன் - இடையன்

சீராரும் வதுவை முறை சிந்தாமல் கரம்பற்றி
பேராரும் மாங்கலிய நாண்பூட்டி உனையழைத்து
தாராரும் மாமாறன் தன் மதுரை கூட்டிவந்து
நேராரும் உன் பழியை நீக்கிடுவேன் என்றாரே.
19

விதியிதுவே உனக்குமென விடைகொடுத்து நம் தாயாள்
மதி குறைந்த மாறனுடன் மதுரை நகர் தீயேற்ற
சதிபுரிய உளம்கொண்டு தகு மாவின் பழமாகி
பதியாளும் பாண்டியனின் பாரியின்முன் நின்றனளே.
20

மங்கையர்க்கரசியானாள் மாம்பழ வடிவை நோக்க
அம்மையின் அருளால் அ்.து அரிய பெண்குழந்தையாக
கொம்மென திரண்ட கொங்கை கூடலாள் எடுத்துவாரி
தம்முலை அமுதமூட்டி தரும் மகள் சிறப்புச் செய்து
21

மாறனும் மனைவியோடு மகள் எமக்குற்றாள் என்று
காமுறு இன்பம் கூடி களித்துமே இருந்து பின்னை
ஏரிடை குழவிக்குற்ற இரும் பலன் ஓதுமென்று
பாரிடை பலன் சொல்வாரை பணித்தனன் பணித்தவேளை.
22

வேறு

பணித்தவுடன் பார்ப்பனர்கள் பலன்பார்த்து இம்மகவு
கணித்தபடி உன்தனக்கும் கவின்மதுரை நீறாக்கும்
பிணித்த மனை தான் மடியும் பேரரசும் முடிகவிழும்
திணித்து ஒரு பேழை செய்து சேர் கடலில் விடுதி என்றார்.
23

மன்னவனும் மனம் பதறி மந்திரிகள்தனை நோக்கி
பின்னமில்லா பேழையினில் பெறுமகளை உள்வைத்து
தண்ணளி சேர் சமுத்திரத்தில் தள்ளிவிடும் எனக்கூற
சொன்ன மொழி தட்டாமல் சுந்தரியைத் தள்ளினரே.
24

உலகேழும் ஆழ்பவளை உத்தமியை பத்தினியை
நிலமதனில் தெய்வமதாய் நின்றிலங்கு மாதாவை
குல மாதை குஞ்சரியை கூறுமறை உமையவளை
கல மதிலே கையெறிந்தான் கடுவினையின் ஊழ்வலியால்.
25

தாயைப் பணிந்தவனின் தலை துணித்த பாவமதால்
சேயாய் கிடைத்தவளை சேர்கடலில் விட்டதனால்
ஓயாது உழற்றுகின்ற ஊழ்வினையின் ஒட்டத்தை
பாயாது யார் தடுப்பார் பத்தி உமை பதம் பணிவாம்.
26

முன்வினைச் சருக்கம் முற்றிற்று.

## மாநாகர் மகளான சருக்கம்

நீராரும் கடல் மேவும் நெய்தல் நிலத் தொரு பாங்கில்
பேராரும் காவிரிப்பூம் பட்டினமாம் துறையதனில்
நேராரும் வணிகமுறை நீண்ட பலகால மதாய்
பாராரும் பணம் படைத்த பதி வணிக ஊராமே.
1

நீராழி இடையோடி நீண்ட செல்வம்தாம் தேடி
சோராத முயற்சியினால் சொல்லிடு நற்சமயநெறி
மாறாத கொள்கையினார் மாநாகன் நற்பெயரார்
சீராக வாழ்கின்றார் சிறந்திடு நற் செம்பியனில்.
2

செம்பியனில் - சோழநாட்டில்

தவமுடைய மானாகர் தகுபொருள் மேலீட்ட எண்ணி
சிவநாமம் சிந்தை செய்து சேர்கடலின் இடைபோகி
நவமான மணிகளுடன் நற்பதிக்கு வரும் பொழுதில்
பவமான பேழையொன்று பாய்கலத்தை முட்டியதே.

3

பேழைதன்னை எடுத்த பெருவணிகன் புகார் புக்கு
கீழைவைத்து மேல்திறக்க கிளர் ஒளிரும் சிறுகுழவி
தாளியினில் தனிச்சிலம்பு தாங்கி வெளிப்படவே
மாழைதனைக் காண் வறியன் மனம் போல் மகிழ்ந்தனனே.

4

அருகமைந்த மனையாளும் அண்டியுள்ள உறவுகளும்
பெருமகிழ்வு தானடைந்து பெண்மகவு கிடைத்ததென
தருமமுறை சீர்தூக்கி தக்க பொருளீந்துதவி
கரும தெய்வ நோன்பியற்றி களிப்புடனே உற்றனரே.

5

மாதர்குல மதிக்கொழுந்தோ மாதரசோ பூங்குயிலோ
சீதமதி நிலவொளியோ செந்தமிழின் இனிமையதோ
பாதிமதி வேணியனின் பாகத்தமர்ந்தவளோ
ஏதறியேன் அழகு என இறும்பூது கொண்டனனே.

6

பூங்கமல வாசகியோ பொன்னோ புவிமகளோ
ஈங்கெனக்கு மகளாக என்னதவம் செய்தேனோ
வீங்கு புய மாநாகன் விளைந்திடு நல் அன்பதனால்
தாங்கயலார் உற்றவர்க்கும் தானதர்மம் செய்தனனே.

7

கண்ணின் மருட்சி கனிபார்வை கவின் கருமை
தண்ணெண் குளிர்ச்சி தயை நோக்கு தங்கழகு
வண்ண விழிச்சுற்று வளை காந்தம் இவை கண்டு
நண்ணும் மகளுக்கு நாம மொன்று சூட்டுவரே.

8

பெற்ற மகளாகி பேணிவளர் பெண்திருவை
உற்ற உறவுகளில் உடல்சோர்ந்து பற்கழன்று
கற்றை நரைமுடியார் காரணமாய் கண்ணகையாம்
சொற்ற பெயர்சூட்டி தொட்டிலிட்டு ஆட்டினரே.

9

சப்த சுரத்தில் தகு நீலாம்பரி எடுத்து
சப்த உலகமதை தாங்கும் தயாபரியை
சப்த குலமாதரென சாண்கயிறு தான்பிடித்து
சப்த ரிஷி யெனவே சார்வேதம் பாடினரே.

10

வேழமுகனை வேலவனை தந்தவளை
சூலம் பிடித்தோன் துணையான சுந்தரியை
ஞாலம் புகழ் வணிகன் நல்மகளாய் போற்றுதற்கு
ஊனை உருக்கி உயர்தவம்தான் செய்தனனோ.

11

பணியரவில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் சோதரியை
மணியரவை சடை வைத்த மாயசிவன் நாயகியை
திணி உலகை தாங்குகின்ற சீர்மகளை மாதுமையை
வணிகேசன் தன் மகளாய் வளர்த்தெடுக்க முடிந்ததுவோ.

12

உறிதிருடும் மாமாயன் உயர் இடையர் குலம்போந்து
பெருமைபெறு யசோதையிடை சேர்ந்து வளர்ந்ததுபோல்
அருமை உமை அன்னையவள் அணிவணிகர் குல மடைந்து
தருமகளாய் கண்ணகியாய் தங்கி வளர்ந்தனளே.

13

தொட்டில் தனை விட்டு துள்ளுநடை தள்ளுநடை
கிட்டிப்பிடித்து கிடைத்த பொருள் தானெடுத்து
சிற்றில் புனைந்து சிறுசோறு அட்டு ஆடி
முற்றவினை முடிக்க முகிழ் பூப்பும் கண்டனரே.

14

முந்தை வினை முழுதும் முற்றேற இம்முறையில்
சிந்தை களித்து சிற்றாடல் தான்புரிந்து
விந்தை புரிய விழங்கும் திருமணியாம்
பைந்தொடிக்கு மூநான்கு பருவமது வந்ததுவே.

15

பயந்தவர்கள் பாலகிக்கு பருவமணம் செய்ய உன்னி
நயந்தவர்கள் நம்குடியில் நாலுதிக்கும் தான்தேட
வியந்து நம் கண்ணகையார் விவாகம் நான் செய்வதற்கு
உயர்ந்த மணிச்சிலம்பதற்கு உற்ற இணை வேண்டுமென்றார்.

16

வேண்டும் என்று தானுரைக்க வியந்து பிதா நண்பருடன்
பூண்டநாக மணிவாங்கி புரிந்திடுவேன் என்மகளே
நீண்ட சோகம் தனை விடுதி நிம்மதியாய் இருப்பையென
காண்டரிய ரத்தினத்தை காண விளைந்தனனே.

17

நண்பனாம் மீகாமன் நல்லவனை தானழைத்து
அன்பதாய் பேசி அரு நாகரத்தினத்தை
கொண்டுவர நீதான் குறித்த கடலிடைப் போகி
வென்றுவர வேண்டுமென விடைகொடுத்து நின்றனனே.
18

வருணகுலத் துதித்திட்ட வாழ் வீரன் மீகாமன்
தரு கப்பல் மீதேறி தன்படையும் துணைப்படையும்
விரிபடையும் தானாகி விட நாகரத்தினங்கள்
உருவடையும் இடந்தேடி உயர் கடல்மேல் செல்லுவனே.
19

சமுத்திரத்தில் நடுவினிலே தங்கு கீழ்ப்பாகமதில்
தமதாட்கள் காவலுற தங்கு நாககுலத்தலைவன்
பதமான படமதனால் பாதுகாக்கும் நாகமணி
விதமாக இருப்பதனை வினையமாய் தேர்ந்தனனே.
20

ஏவலரை தானழைத்து எழில் நாகரத்தினத்தை
பூவுலகில் கொண்டுவர போங்கள் என்று விடைகொடுத்து
காவலர்கள் கடிதேகி கண்ட வெடியரசு வென்று
நீலகேசரி புலம்ப நெடியகடல் தான் நீங்கி
21

தம்பிவீர நாரணனை தகு வாளால் வெற்றிகொண்டு
தும்பிமுகன் தனை துதித்து துலங்கு பெருமற்போரில்
நின்றிலங்கு தேவனையும் நீரிடையே தான்விழுத்தி
வென்றிபுனை வீரர்களாய் மீண்டனரே புகார் நகரம்.
22

நாகர் குலத்தலைவன் நல்கியிடு ரத்தினத்தை
மீகாமனாகும் விறலுடையோன் தான் வாங்கி
மானாகன் கைக்கொடுக்க மகிழ்ந்துமே தான்எடுத்து
தேனான கண்ணகிக்கு சீர்சிலம்பு செய்தனரே. 23

பெண்ணாள் மனம்மகிழ பெரு நாகரத்தினத்தை
கன்னான் உருக்கி கருமணிகள் உள்ளுறுத்தி
பொன்னார் சிலம்பாக்கி புனைந்து திருக்காலில்
மின்னார் மணவினையை மேவுதற்கு முன்னினரே. 24

- மாநாகர் மகளான சருக்கம் முற்றிற்று -

## மணவினைச் சருக்கம்

மங்கை மணவினைக்கிசைய மானாகர் மகிழ்வுகொண்டு
தங்கள் குலமுறை நாடி தனவானாம் மாசாத்தர்
சிங்கமென உறு மைந்தன் சீரான கோவலனை
பங்கமிலா மணம்பேச பரிந்து மனம் கொண்டனரே. 1

மாசாத்தர் மனையகத்தே மைத்துனராம் மாநாகர்
கூசாமல் உட்புகுந்து கொண்டாடி மைத்துனரே
பேசுமென்ன, என்மகளை பெண் கொடுக்க எண்ணி உன்தன்
வாசல் வந்தேன் என உரைக்க வாரும் என கைகொடுத்து 2

மைத்துனர்கள் இருபேரும் மாறிமாறித் தாம் தழுவி
சொந்தங்கள் விட்டகலா தோதான தம்மகட்கு
பந்தமுடன் கலியாணம் பண்ணுதற்கு இருபேரும்
தம்தம் விருப்பத்தை தயங்காமல் கூறினரே. 3

வேறு

தாதையானவர் தம் மகன் கோவலன் தனக்கும்
மாது கண்ணகை மகளுக்கும் மணவினை செய்ய
சாதுவாகிய மறையவர் சோதிடர் நோக்கி
ஏதுவாகிய பொருத்தங்கள் இயம்புவீர் என்றார்.
4

உற்ற திருக்கணிதமுறை உயர் கணக்கு தான்பார்த்து
குற்றமற திதிகரணம் கோள். நிலையுமாராய்ந்து
வெற்றி பெறுதாலி வியன்ரச்சு வேதையுடன்
மற்றப் பொருத்தமெல்லாம் வகை தெரிந்து பார்த்தனரே
5

சீர்பொருந்தும் கண்ணகைக்கு சிறப்பு மணம் செய்வதற்கு
சார்பொருந்து மகமதனில் அட்டமத்தில் சனியுறவாய்
பார்பொருந்து சூரியனும் பகையாக ராகுவுடன்
தார்பொருந்து கேதுவது தனியாக பார்பதினால்
6

ஓங்குபுகழ் கோவலர்க்கும் உத்தமி கண்ணகையார்க்கும்
மாங்கலியப் பொருத்தமின்மை மற்றுமுள பொருத்தங்கள்
தாங்க முடியா துன்பம் தக்க பொருளிழப்பாகும்
தேங்கு புகழ் சோதிடர்கள் செப்பினரே தம்மனத்துள்.
7

மனப் பொருத்தம் இனப் பொருத்தம் மற்றுமுள தனப்பொருத்தம்
குணப் பொருத்தம் உண்டதனால் கோவலர்க்கும் கண்ணகிக்கும்
தினப் பொருத்தமாகவுள்ள சீர் நிலவு உரோகினியை
புனத்திடையே கூடும் நாள் பொருத்தமென உரைத்தனரே.
8

வேறு

மாநாகன் மகள் கண்ணகி மங்கை மணவினையாம்
பாகாம் செய்தி பரம்பலும் பாரில் பலநாடும்
ஊராம் பேரும் உற்றவர் சுற்றம் உறுநண்பர்
நேராம் பொன்னி நாட்டிடை வந்து நிறைவுற்றார். 9

வணிகர் குலத்துவாழ் பெருமைந்தன் கலியாணம்
கணிதம் வல்லோர் காட்டும் நாளில் சுபமுகூர்த்தம்
பணிகள் செய்வோர் பரம்பிடு பாலார் பொற்கொல்லர்
துணியும் விற்போர் பூமலர் சாந்தம் கொடுவந்தார். 10

வேறு

கோல்வளை சுட்டியும் மகரப் பட்டமும்
மேல்வளை மேகலை தொடையல் முத்தணி
வால்வளை வல்லியம் வயங்கு குண்டலம்
சூல்வளை சூடகம் தோய்ந்த பல்மணி. 11

வச்சிரம் பதுமமே மரகதம் முதல்
விச்சிடு நீலம் கோமேதகமும் புட்பரா(கம்)
நச்சு வைடூரியம் பவளம் முத்தினால்
மெச்சுவாபரணங்கள் விரைந்து செய்குவார். 12

மாணிக்கப்பரலினை மறைத்து வைத்திடும்
பாணிக்கை வினையினால் பரிபுரத்தினை
கோணிக்கால் அளவிற்கு குனித்து செய்திடும்
சூணிற்கும் சிலம்பினைத் தோதாய் செய்குவார். 13

வேறு

நாகத்தின் மணியை வைத்து நற்சிலம்பதனைச் செய்து
மோகத்தில் மகட்கு நல்கி மோதிடும் அழகுபார்த்து
பாகத்தில் இருத்தி காலின் பரிபுரம் தடவிதட்டி
ஆகத்தின் அன்புகூடும் அடுவிதி அறியாத் தாதை.

14

திருந்து மொழி மாநாகர் மாசாத்தர் இருபேரும்
மருந்துமொழிக் கண்ணகைக்கும் கோவலர்க்கும் மணமுடிக்க
வரும்நாளை எதிர்பார்த்து வந்தோரை வருவிருந்தை
அருந்த பெருமண்டபங்கள் ஆங்காங்கமைத்தனரே.

15

இந்திரனின் மாளிகையாய் இலங்கு மணி பந்தல் செய்து
சிங்கழது தாங்குகின்ற சிறந்த பொன்னின் தவிசு வைத்து
வந்தவர்கள் முறைமுறையாய் வதிவதற்கு மாடங்கள்
சொந்தங்கள் தங்குவதற்கு தோதாக விடுதி செய்தார்

16

நாளது முகூர்த்தம் நண்ண நன்கதாய் அலங்கரித்து
வாழையும் கமுகும் நாட்டி வளைந்த தோரணங்கள் செய்து
பால் தயிர் நெய்யிலான பணிகார வகைகள் பண்ணி
போனகம் பொங்கல் செய்து புதிய நீருணவு மாக்கி

17

மண்டபங்கள் சமைத்தபின்னை வாய்ந்த இருதாதையரும்
சொந்த வணிகர்களும் சூழ்ந்து வருமாதர்களும்
பந்தல்கால் மூலையிலே பயில் கன்னிக்கால் நாட்டி
இந்திர விழாவாக எடுத்தனரே மணவினையை

18

சாற்று பொன்னி நாட்டுடையார் தங்கி அமர்ந்திடவே
போற்று வெள்ளியாசனமும் புகழுமணி ஆசனமும்
மாற்று பொன்னினாசனமும் மகரத்திலாசனமும்
தோற்று சிங்க ஆசனமும் தோதாக வைத்தனரே 19

அரசாணி நடுவில் வைத்து அரிசி மஞ்சள் பாலறுகு
திரையாரும் பட்டாடைசேர் மாத்திய குலத்தார்
உருவாக்கு அக்கினியும் ஓமத்தின் புகையூட்டி
தரு பளுக்காய் வெற்றிலையும் தகு தூப தீபமுடன் 20

சீராரும் மாசாத்தர் சிறப்பான கோவலனை
பாராரும் போற்ற பதியுடையார் கூட்டிவந்து
நீராரும் படியாட்டி நிறைபட்டு மாலையுடன்
தாராரும் மணக்கோலம் தப்பாமல் செய்தனரே. 21

மணவாளன் கோவலரை மங்கை நல்லார் எதிராகி
இனிதான இரு நான்கு மங்கலங்கள் தான் தாங்கி
குணமான தீபங்கள் தூபங்கள் மலர் கொண்டு
தனியாகவே வாழ்த்தி தக்கோலம் செய்தனரே. 22

மாப்பிள்ளை கோவலரை மாமனார் வரவேற்று
காப்பிட்டு கை கொடுத்து கனகத்தவிசில் வைத்து
தீப்பற்று குண்டமதில் சீரவிகள் தான் சொரிந்து
நாப்பற்று மறையவர்கள் நல்வேதம் ஓதினரே. 23

பெண்ணுக் கணிகலத்தை பெருந்திருவை உமையாகி
கண்ணுக்கு இனியாளை கண்ணகையாம் தாயாரை
வண்ணப் பெருமழகு போதாது என நினைத்து
எண்ணிச் செயலழகும் செய்தனரே ஏந்திழையார்.
24

வேறு

கருமுகிலாமென கடி மென் கூந்தலில்
இரு பிரிவாக்கியே இட்ட நாபிநெய்
விரிதரு வாசனை பளிதம் சாந்தமும்
பரிவொடே தன் பனி நீரிலாட்டினார்
25

பூந்துகில் தனை உடீ பொதிந்த துப்பினில்
மாந்தளி ரென்னவே வனப்பும் காந்தியும்
ஓங்கிட அகில் புகை காட்டி மாமலர்
தாங்கிடு மாலைகள் தலையும் தோளுமாய்
26

நெற்றியில் திலகமும் நீலச்சுட்டியும்
பற்றினில் பல்மணி பதித்த மாலைகள்
இற்றிடு இடைதனில் இனிய மேகலை
சுற்றியே கால்களில் சிலம்பு சூட்டினார்.
27

இவ்விடை ஒப்பனை இயற்றி பெண்களார்
அவ்விடை அகன்றிட அவளைக் கண்ணுறுஉ
தெய்வதமாதென திகழும் மாதரார்
கையிடை ஏந்தியே காவல் செய்குவார்.
28

வேறு

அன்னையை அழைக்க என்ன ஆரியர்கூற சேடி
முன்னையே வணங்கி தாயே எழுந்தருள் என்று வேண்ட
கன்னியார் எழுந்து மெல்ல காலடி ஒதுக்கி நாணி
சின்ன மென் சிலம்பு ஆர்க்க சிறந்திடு பந்தல் வந்தார்.
29

வந்துநின்ற கண்ணகையார் வடிவழகர் முகம் நோக்கி
சிந்து நாணம் கண்சிவப்ப சின்ன இடை தான் நெளிய
முந்து மாலைதனை எடுத்து முன்வினையை முடிப்பனென
கந்தரத்தே அணிவித்து கைபிடிக்க இருந்தனரே.
30

வேதியர் வேதம் ஓத விண்ணவர் கீதம்பாட
நாதியர் மாரிதூவ நற்தந்தை தாயார் போற்ற
சோதியார் வேற்கண் நல்லார் சுந்தரர் கோவலர்க்கு
சீதமார் மாலை சூட்டி சிறந்தநல் மனையாளாகி
31

வேறு

மந்திர பூசை செய் மங்கல நாணை
சுந்தர கோவல செம்மல் கைவாங்கி
மங்கள மோத மணிக்களம் ஆர்த்து
தங்கள் கைசேர்த்து சதிபதி கண்டார்.
32

கோவலன் கண்ணகி கோல முகத்தால்
மாலது கொண்ட மனத்தினனாகி
தேசறு பொன்னோ சிந்தாமணியோ
மாசறு கனியோ மதியோ ரதியோ
33

வான்படு முத்தோ வானதி மணியோ
தேன்படு கரும்போ சிந்திடும் அமிழ்தோ
கான்படு குயிலோ களி மயில் மானோ
யான் பெறும் பேறு யார் அடைவாரோ.
34

வணிகர் குலத்தனும் வல்லியும் சேர்ந்து
திணிஎரி வன்னி வலம் முறையாகி
தணி சிலை அம்மியின் காலடி வைத்து
மணி முடி தாழ்த்தி பணிந்தனர் மேலோர்
35

அவ்வை யொடப்பனை அன்பொடு தாழ்ந்து
எவ்வவர் ஆசிகள் இன்புடன் ஏற்று
தம்மணி மண்டபம் தன்னிடை புக்கார்
இல்லற இன்ப சுகம் பெற எண்ணி.
36

வேறு

அன்பினர் நெருக்கமான அர்த்தராத்திரியின் வேளை
இன்பினர் நடுவில் ஓங்கி எரிதழல் எழுதலோடு
துன்பியல் நிலைமை நாடி துடிதுடித் தெழுந்து துள்ளி
தன்வயமிழந்து ஈது சாற்றுதலுற்றானன்றே.
37

ஐயகோ யாது சொல்வேன் அற்புதம் அறிந்தேன் இன்று
தெய்வதமாதை யானே தீண்டுதற் கெண்ணம் கொண்டேன்
உய்வகை எனக்கு உண்டோ உன்னியே உள்ளம்தேம்பி
கையினை சிரமேற்கூப்பி கன்னியை வணக்கம் செய்தான்.
38

உலகருள்தாயே என்தன் உத்தமி தெய்வமாதே
தெருள்மனத் துண்மை காட்டி தெளிவித்து ஆண்டாய் என்று
பதிஉனக் உதவேன் உன்பாதத்தை பணியும் பக்தன்
விதி எனக்கூறி மாதை வேண்டுதல் செய்குவானே. 39

அம்மையாய் உறையும் தேவி அன்னவர்க் கிரங்கி நீயும்
மும்மையை உணராய் என்தன் முதல்வனாயிருத்தி பின்னை
என்னையே உன்பால் தந்தேன் என்றுமே தேற்றி அன்பால்
சொன்ன வாசகத்தைக் கேட்டு துயரகன்றிருந்தானன்றே. 40

மணவினைச் சருக்கம் முற்றிற்று

## மாதவி சூழ்வினைச் சருக்கம்

இந்திரன் தவிசிருக்க இமையவர் வட்டம் வீச
சந்திரன் தபனன் என்போர் தண்குடை கவரி தாங்க
தும்புரு பாடல்பாட நாரதன் யாழை மீட்ட
உந்துறு தாள மார்க்க ஊர்வசி ஆடினாளே. 1

ஊர்வசி நடனமாட உற்ற இந்திரனின் மைந்தன்
பேருறு சயந்தன் கண்ணும் பெய்வளை கண்ணும் சேர
சாருறு ஆட்டம் பின்ன தாளமும் தவறதாக
நாரத முனிவன்சீறி நானிலம் பிறப்பீர் சாபம் 2

உற்றிடு சாபத்தாலும் உமையருள் வாக்கினாலும்
கற்றிடு கணிகையாக கடையூருப் பட்டணத்தில்
சொற்ற மாதவியார் பேரில் தோன்றிட சயந்த தேவன்
மற்ற மாசாத்தன் மைந்தன் கோவலனாகி யுற்றான். 3

சித்திராபதி வயிற்றில் சிறந்த மாதவியாள் தோன்றி
முத்திய பரதம் குச்சு, முதிர் தேகி வடுகுமாகி
பத்திய பண்ணைப்பாடி பத அகம்புறத்துக் கூத்தும்
வித்தையில் வளர்ந்து வீர நடன சிங்காரியாகி
4

வேறு

வாய்ப்பாட்டும் வடகலையும் வளரும் செந்தமிழ் கலையும்
தாய்ப்பாட்டு சித்திரமும் வித்தாரப் பலநெறியும்
சேய்ப்பாட்டு மணிப்பந்து கொண்ட பல நாட்டியமும்
மாய்ப்பாட்டு அறுபத்து நான்கு கலை தேறினளே.
5

கற்றுத்துறை சேர்ந்த கவின் எழிலார் மாதவியை
முற்றப் பழக்கி முறை தெரிந்த நட்டுவர்கள்
பெற்றவளும் கூடி பெரிய ஒரு அரங்கேற்றம்
உற்ற அவையில் உவந்து ஆட்ட எண்ணினரே.
6

கற்றவர்கள் மந்திரிகள் காவலர்கள் ஏவலர்கள்
மற்றப் புலவர்சுற்ற மாண்சிவிகை மேல் அமர்ந்த
கொற்றவனே நீடூழி வாழ்வையென வாழ்த்தெடுத்து
மெத்தக் கலை தெரிந்த நட்டுவர்கள் வேண்டினரே.
7

மன்னாதி மன்னாகேள் எங்கள் மகள் மாதவியார்
உன் ஆணைதான் நடத்தும் உயர்ந்த மனைச்சபையகத்தே
தன்னான நடனவித்தை தகுபாடல் நாட்டியத்தை
முன்னாக காட்டுதற்கு முறை அரசே துணைபுரிக.
8

நற்கலைகள் மதிக்கின்ற நாடாளும் சோழ துரை
உற்ற திறன் பார்க்க உள்ளுவகையாற் சிறந்து
மற்ற வைகாசி மதி வந்துதித்த பத்தாம் நாள்
சுற்றிடபராசி சனி தோற்றுகின்ற ரோகிணியில்

9

கற்றவித்தையை வந்து காட்டுங்கள் எனவுரைக்க
சுற்றத்தோடேகி தோகை நடை மாதவிக்கு
நற்செய்தி சொல்லி நட்டுவர்கள் தாயாரும்
உற்ற அரங்கேற்ற நாளை உன்னி இருந்தனரே.

10

அரங்கேற்ற நாளிதென்று அறிவித்தல் முரசுமுறை
தெரிவித்து நாட்டிலுள்ளார் யாவருமே திரண்டுவர
வரிபுலியின் கொடியுடைய வண்தமிழன் சோழரசன்
தருவித்த தோழருடன் அமைச்சருடன் இருந்தனனே.

11

வீற்றிருந்த மன்னனுக்கு வெண்சாமரம் வீச
நாற்றிசையும் குடை நிழற்ற நல்லறிஞர் தற்சூழ
சாற்றரிய தாரகைபோல் யாவர்களும் சூழ்ந்திருக்க
ஏற்றமுறு மாதவியை அரங்கதனில் அழையுமென்றான்.

12

அழைத்த மொழி தானறிந்து அகமகிழ்ந்து மாதவியார்
குழைத்த பலவாசனையில் குளித்தெழுந்து துகில்புனைந்து
விளைத்த பல ஆபரணம் வியன்காலில் சலங்கைக்கட்டி
அமைத்த பெரும் அரங்கத்தில் அன்னமென நடந்தனளே.

13

மாதவியின் அழகுகண்டு மன்னவனும் அமைச்சர்களும்
காதலொடு காணவந்த கட்டு இளம் காளையரும்
நாத இசை பருக வந்த நங்கைகளும் எல்லோரும்
ஓத ஒரு சொல்லின்றி ஓவியம்போல் நின்றனரே.
14

கலியாண நாலாம் நாள் கண்ணகையை விடைகொண்டு
பொலிவணிகன் கோவலனும் புதுமாப்பிளை மிடுக்காய்
கலிவந்து முன்தள்ள காரிகையாள் நடம்பார்க்க
வலிகொண்ட தோழருடன் வந்து மண்டபத்திருந்தான்.
15

ஆடென்ற உத்தரவு அரசனிடத்திருந்து வர
மாடுற்ற மத்தளமும் மடிவீணை தாளங்கள்
நீடுற்ற ஒலிஎழுப்ப நின்று அசைந்து மாதவியாள்
பாடுற்ற நட்டுவனின் பதம் பணிந்து சபை வணங்கி
16

வேறு

தெய்வதம் பராவி மெல்ல சீரடி ஒதுக்கி நாணி
நைவள இசையே யென்ன நாவினை சுருதிகூட்டி
மைவிழி பார்வைகாட்டி மருட்டி மெய் வாய் முணுத்து
கையினை குவித்து கான இசை நடம் தொடங்கினாளே.
17

பண்ணொடு பரதமாடி பகர் குச்சுப்புடியுமாடி
நண்ணலாரிப்பு காட்டி நகர்ந்து தில்லானா ஆடி
வண்ண மெல்நடிப்பு செய்து வகை நடை நட்டம் சேர
திண்ணமாம் அகவல், தூங்கல் சிறந்திட ஆடல் செய்தாள்.
18

நைவளம் - குறிஞ்சியாழ்

சுற்றி முன்னாக வந்து சுழன்றுமே எட்டுப் போட்டு
எற்றியே காலை நீட்டி இரு தனமசைத்து கண்ணை
நெற்றி மேலாக்கி சோகம் நிருத்தமாய் கோபம் வீரம்
பற்றினால் காதல் நாணல் பரிவுடன் அச்சம் காட்டி
19

நயந்தாடி சோடுகட்டி நல்கும்ப திருநடனம்
புயந்தாவு சிவநடனம் புரிந்துமே நிற்பளவில்
வயந்தாவு வாள் வேந்தன் வனிதையவள் முகம் நோக்கி
வியந்து மிக மனம்களித்து வேண்டுவன பகர்தி என்றான்.
20

மன்னவனும் மனமகிழ்ந்து மாணிக்கம் முத்துவடம்
பின்னியதோர் ரத்தினத்தின் பெருமாலை தனைக் கழற்றி
முன்னைநின்ற மாதவிக்கு முதற்பரிசு எனவழங்க
தன்பெருமை தலைக்கேற தாழ்ந்துகையில் வாங்கினளே.
21

ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னின் அரியமாலை தனைகொடுத்து
பாய்பரி தேர் யானை படை பாராளும் சோழதுரை
நேயமுடன் முகம்பார்த்து நேரிழையே வேண்டுவன
ஓதுமென மாதவியாள் உவந்திவ்வா றுரைப்பாளே.
22

பாராளும் முடிவேந்தே பண்பில்லா குலம் சேர்ந்து
தீராத துன்பத்தில் சேர்ந்தழுங்கும் என்தனக்கு
நேராக வாழ்வதற்கும் நீங்காமல் இருப்பதற்கும்
சீரான இச்சபைக்கு சேதிஒன்று சொல்லுவனே.
23

என்கையின் மாலையதை இவ்வரங்க கூம்பேறி
நன்மை பெற வேண்டும் என்று நானெறிவேன் சபையகத்தே
மன்னர்களாய் இருப்பவர்கள் யார் கழுத்தில் விழுந்தாலும்
அன்னவரே என் கணவர் ஆவார் என் றெறிந்தனளே.
24

மாலைதனை விட்டெறிய மதிசூடும் பரன் விதியால்
கோல மலி கோவலனில் கோதையது தான் விழவே
பாலிருந்த கோவலனார் பதைபதைத்து தான் கழற்றி
கோலவிழியாள் பக்கம் கொதித்தெழுந்து வீசினரே.
25

பூமாலை மேல் சுழன்று பூவையன்னாள் கந்தரத்தில்
தாமாக விழுந்திடவே தங்கியுள்ள சபையோர்கள்
நீதிபுரி அரசனுமாய் நீர்தான் காண் இவள் கணவன்
ஓதியிட் கோவலனும் உறுசினத்தில் பயம் கண்டான்.
26

வருத்தமுற்ற கோவலரும் மன்னவரின் சபையகத்தே
திருத்தமுடன் மதிமயங்கி செய்வதொன்று அறியாமல்
கருத்தழிந்து ஆசைக் கடலினிடையே வீழ்ந்து
நிருத்த மகளுடன் கூட நிறை ஊழும் தள்ளியதே.
27

கண்ணிரண்டும் மின்ன கவின்முகமும் வியர்வடைய
நண்ண விரக வெள்ள நாயகனாம் மதன் வாட்ட
எண்ணம் இழந்து இகல் வலியும் தான் கெட்டு
பெண்ணேயென வீழ்ந்து பேதலித்து நின்றனரே.
28

கற்பின் கொழுந்தான கண்ணகியை தான் மறந்து
அற்ப சிறுஆசை ஆட்பட்டு அதிலமிழ்ந்தி
சொற் கல்வி ஞானம் தோன்றுகுல மான மெல்லாம்
பிறபட்டுப் போக பெய்வளையைச் சேர்ந்தனரே.
29

தன்னையும் தோற்று தகு பொருளும் நவமணியும்
பொன்னையும் தோற்று புவியில் நடைப்பிணமாக்க
முன்னையே சென்று முடிக்கும் விதிதான் நடாத்தும்
சின்னவிளையாட்டில் சீர் சனியும் சேர்ந்ததுவே.
30

அன்பிற் கணிகலமாய் ஆண்டவர்க்கு அடிமையதாய்
பெண்ணின் பெருவிளக்காய் பேசும் பொற்சித்திரமாய்
மன்னவர்க்கு ஏற்ற மாண்புடைய மனையாளாய்
நண்ணியிடும் மாதவிக்கு நஞ்சையொத்த ஒரு மாதா.
31

மந்தரையாம் கூனி மறி முகத்தாள் சூர்ப்பனகை
சிந்தழகுசீதைக்கு சேர்ந்திட்ட மாரீசன்
பந்தம் கெடுத்து விட்ட பாரதத்து சகுனியைப் போல்
வந்துற்ற தாயும் மாதவிக்கு வாய்த்தனளே.
32

எல்லாம் தெரிந்து இலங்கு புகழ்க் கோவலனாம்
நல்லான் திரவியத்தை நாட்டியத்து நங்கைதன்னை
சொல்லால் கரைத்து தோகை மகள் தெரியாமல்
வல்லான் பொருள் குவிக்க வஞ்சனையாள் உன்னினளே.
33

மறிமுகத்தாள் - அசமுகி

சீர்வணிகன் கொண்ட செல்வங்கள் அத்தனையும்
தார்குழலாள் மாதவிக்குத் தெரியாமல் தாயாகும்
கார் அழகு கண்ணுடைய கணிகையவள் தன்னுடைய
சார்மனையில் சேர்த்து சதி செய்திருந்தனளே.

34

தன் கணவன் கோவலனார் சதி கூடி மாதவியின்
புன் செய்கையாளாக போந்துறையும் செய்கையினை
நன் சேடிகள் உரைக்க நாயகி கண்ணகை தேர்ந்து
துன்படைந்து சோர்ந்து துயில்துறந்து இருந்தனளே.

35

கொடுவந்த செல்வமெல்லாம் கொடியிடையார் வாங்கி துன்பம்
அடைகின்ற கண்ணகையார் அமைபொருளும் பெற்று பின்னை
கடனாளி தானாக்கி கையில் ஒன்றும் இல்லாத
முடமாக கோவலனை முன்னவளாய் கண்டனளே.

36

மோகமதுமுப்பது நாள் மூளாசை அறுபது நாள்
சோகமது கூடிவரும் சொர்ணம் பொருளில்லானை
பாகமதில் தாய் வேண்டாள் பத்தினியும் சினமடைவள்
தாகமது கொண்டாலும் தண்ணீரும் கிடையாதே.

37

இல்லானை வேண்டுகின்ற இல்லாளும் இல்லைஅவன்
சொன்னாலும் ஏறாது சுத்திநின்று பரிகசிப்பர்
மன்னாலும் பொருட் பெண்டிர் மயக்கத்தில் உள்ளவர்க்கு
இன்னாவந்தெய்தும் இருள்வினையும் சேர்ந்திடுமே

38

முன்னவள் - மூதேவி

சித்திரைப் பூரணையில் சிறந்த நற் புகாரிலுள்ளார்
சுத்தியே கூடியாடி சோலை இந்திரனை வைத்து
பத்தியில் காவிரியின் பாயும் நீர் அள்ளி ஆட்டி
மற்ற தெய்வங்கள் போற்றி மனங்களி கொள்வராமே.
39

வேறு

கலை வல்ல கோவலன் தன் கையாழ் வாங்கி
கருத்தான அகப்பொருளின் துணிவு நாடி
நிலைகொண்ட ஆற்றுவரிப் பாடல்பாட
நிறைமுகத்தாள் அவன்மீது ஐயங்கொள்ள
வலைபின்ன ஊழுமது சேர்ந்து கூட
வரிப்பாடல் எதிர்பாடலாக நீட
சிலை நுதலாள் பிறன் ஆசை கொண்டாள் என்று
சினந்தவளைப் புறந்தள்ளி செல்லுவானே.
40

சந்தேகம் கூடியிட சதியும் பின்ன
சார்குழலாள் கோவலனை வெறித்து நோக்க
உந்து மதி தெளிந்து குறை உணர்வு கூட்ட
உயர் மனைவி உத்தமியாள் உள்ளம் சேர
நந்து நடை தள்ளாட நாணம் நண்ண
நல்லுலகம் வசைபாடு நாதம் கேட்க
கந்தினிடை கடு வேளம் கலந்த தென்ன
கண்ணகியார் கவின் வாசல் காணுவானே.
41

மாதவி சூழ்வினைச் சருக்கம் முற்றிற்று.

## சிலம்பு கூறற் சருக்கம்

நேரடை நிதியும் கெட்டு நிலை தடுமாறிச் சோர்ந்து
சீருறு சிறப்பும் போக்கி செய்வதொன்றறியானாகி
தார்புகழ் வணிக ஏந்தல் தன்மனை உறையுள் வாயில்
சேர்தலும் சேடி ஓடி செய்தி கண்ணகைக்கு செப்பும்.
1

செப்புறும் மனைய மாற்றம் சேயிளை தாயாள் கேட்டு
இப்புறம் ஓடிவந்து இணையவன் பாதம் வீழ்ந்து
செப்புதி நான் செய்தீது தெய்வமே என்று போற்றி
கைப்பிடியாக பற்றி கணவனை கொடு சென்றாளே.
2

ஒப்புடன் முகம்மலர்ந்து உபசரித்து உண்மையாகி
தப்பதாய் ஒன்றும் கொள்ளாத் தருவிதி ஆட்டு என்று
பற்பல வார்த்தை கூறி பகரும் மந்திரியேயாகி
நற்பல கதைகள் பேசி நாயகி தேற்றினாளே.
3

மாதுலன் முகத்தைப் பாரான் மற்ற நண்பர்கள் தோரான்
நாவுலர் பேச்சு வாரான் நகைமுகம் இல்லானாகி
மானம தொலைந்த பின்பு வாழ்வது தகுமோ என்று
வானம வெறித்து நோக்கி வணிகேசன் இருந்திட்டானே.
4

கைப்பொருள் இல்லானாக கவுரவம் யாவும் போக்கி
எப்படி வாழ்வேன் என்று ஏக்கமே உருவதாகி
தப்புவ தென்னை என்று தார்வணிகேசன் சோர
செப்பு, மந்திரம தொன்று சீர்மகள் செப்புவாளே.
5

மாதுலன் - மாமன்

துன்பியல் வந்தபோதும் சூழ்வினை தொடர்ந்த போதும்
நன்மைசேர் நூல்கள் கற்றோர் நலிவடைகில்லார் ஐயா
வன்மையாய் முயற்சி கூடி வாழ்வியல் முறைமை நாடி
உண்மையாய் உழைத்து மேன்மையாளராய் உலவுவாரே.

6

வேறு

இழந்திடு செல்வமும் இயல்பு வாழ்க்கையும்
பொருந்திடு கீர்த்தியும் புகழும்மற்றதும்
தொலைந்தன என மனந்துயரினைப் படா(து)
மலைந்திடும் முயற்சியால் மகிழ்ச்சி கொள்ளுவாம்.

7

செல்வம் என்றொரு பெயர் செல்வதாதலில்
நல்லவர் மாட்டது ஞாலத்துள்ளவர்
எல்லவர் தம்மதாய் ஏகும் மீண்டிடும்
வல்லவர் முயற்சியில் வந்தும் சேருமே.

8

ஆதலின் துன்பதை அறுமின் அன்புடை
மாது நான் சொல்வதை மதியில் கொள்ளுமின்
காதலில் பூட்டிய கால் சிலம்பதை
வேதனை மாற்றிட விற்று கொள்ளுதும்

9

சிலம்பதை விற்றிடும் செல்வம் கொண்டுமே
நலம்பட வாணிபம் நலத்தில் ஓங்கிட
கலம்படு வணிகனாய் காலம் மாற்றிடும்
புலம்பிடேல் என்சொலை புந்தி கொள்ளுவாம்.

10

வேறு

இன்துணையான இன் சொலில் கண்ணகை இதுகூற
துன்படை கோவலன் துணிவுடன் மகிழ்வுடன் எழுகாலை
நன்புடை மாதுலன் நாயகன் தாதை நனிசிந்தை
அன்பொடு கூடிய ஆதரவத்துடன் அமர்வுற்றார்.
11

திரையறை வாரிதி வீழ்ந்தவர் தெப்பம் கண்டார் போல்
கரையது கண்டு களிக்கும் கலத்திடை வந்தார் போல்
வரையது காணா மகிழ்ச்சியில் வந்திடு வணிகேசன்
உரைபுகல் கண்ணகையார் முகநோக்கி உவப்புற்றான்.
12

மற்றது காலையில் மதிவளர் கண்ணகை முகநோக்கி
சொற்று சிலம்பதை தூய நகரத்திடை விற்காது
நற்பதீயாம் மதுரைப் பதியேகி நல்லோர் முன்
விற்றுறு செல்வ விரிந்திட வாழுதும் இனியென்றான்.
13

வேறு

வடித்த வேற் கண்ணியோடு மாசாத்தன் மைந்தனானோன்
நடித்தவள் மோகம் நீங்கி நள்ளிருள் விடியும்வேளை
ஒருத்தரும் அறியா வண்ணம் ஒண்புகார் நகரம்விட்டு
தருத்திரள் சோலை தாண்டி தனிவழி நடந்திட்டாரே.
14

கருத்தினில் முயற்சி கூடி காமரு தண்காவிட்டு
மருத்துவன் ராணியோடு மறைந்துறை தன்மையாகி
திருத்தமாம் மேற்கு நோக்கி சென்றொரு காதம் போகி
விருத்தளாம் கவுந்தி வைகும் வியன்தவச்சாலை வந்தார்.
15

மருத்துவன் - இந்திரன்

கவுந்தியாம் அடிகள் பாதம் கருணையால் வணங்கி பின்னை
தவந்தனில் சிறந்ததாயே தகுவழி மதுரைக்கேக
உவந்துநீர் காட்டு கென்ன ஒப்பிலா தாயுமானாள்
நயந்திவர் தன்மை நோக்கி நவிலுவாள் மதுரைத்தன்மை.

16

பாண்டியன் ஆளும் நாடு பழம் பெரும் சிறப்புத்தங்கும்
தீஞ்சுவை தமிழின் நாடு சிறந்தவர் வாழும் நாடு
மாண்புடை மதுரைதன்னை மாநகராகக் கொண்ட
வான்புடை வளங்களாலே மலிந்திடு கீர்த்தி நாடு.

17

தென்னவன் செழியமன்னன் சீரசெங்கோல் செலுத்தும் நாடு
நன்னவர் வாழும் நாடு நற்கலை தெரிந்த நாடு
கன்னலும் கமுகு வாழை கனதெங்கு களனியாக
பன்னரும் பல செல்வங்கள் பாங்குடை செல்வநாடு

18

இன்ன நல் வளம் பூண்டுள்ள இந்த நல் மதுரைக்கேக
முன்னிய தென்னை என்ன மொழிகுவான் வணிகநாதன்
கன்னி மாதவி மேல் கொண்ட காதலும் விதியும் கூடி
நண்ணிய தெல்லாம் தோற்று நாயிலும் கடைப்பட்டேனே.

19

பொன்னை நேர் கண்ணகிக்கு புரிந்தவிக் கொடுமையாலே
என்னை நேர்ந்தது இத்தன்மை இதனில் நான் மீள வேண்டி
கண்ணியாம் மனைவி பாத காற்சிலம்பதனை விற்க
உன்னியே மதுரைக்கேக உளத்திடை நினைந்தோம் தாயே.

20

நல்லது நானுமந்த நாட்டினிற்கேக வென்று
சொல்லறு கீர்த்தி நீடு சோதிவேல் குடிகள் மற்றும்
எல்லரும்புகழ வாழும் இறை நெடுஞ் செழியனான
நல்லவன் செங்கோல் மேன்மை நாடியே இருந்திட்டேனே.
21

என்னலும் இறைஞ்சி தாயே எம்முடன் நீங்கள் சேர
புண்ணியம் செய்தேன் என்று பொருவில் சீர வணிகன் கூற
கன்னி கண்ணகையும் போற்றி கான்வழி மூவராக
நன் உறையூர தென்னும் நாட்டிடை சேர்ந்திட்டாரே.
22

வைகறைப் பொழுதெழுந்து வளரும் தென்திசையாய் சென்று
மைவரை நாடு நீங்கி மயக்குறும் புலன்கள் புக்கு
செய்வுயல் ஓடை வாவி சீர் கொடும்பாளூர் தாண்டி
பையரவணிந்த நாதன் பதியதாம் மதுரை கண்டார்.
23

சொக்க நாதப் பெருமான் தோன்று சிவ தலம் கண்டு
மிக்க பேருவகையினால் மெய்மறந்து வேண்டி நின்று
தக்கதுணை மனையோடு சங்கரியைத் தொழுதேத்தி
பக்கமதாய் உள்ள பள்ளியினைக் கண்டனரே.
24

அருகனை வணங்க வேண்டி ஆங்குடை பள்ளி செல்ல
கருமமதான தாயார் கவுந்தியும் பிரிந்து செல்ல
தருவிடை பெற்று பாங்காய் தங்கிடு வீதியூடு
வருகுல இடைய ரூரை வந்தடைவுற்றாரன்றே.
25

மாதவிக்குப் பொருள் தோற்று மாசாத்தர் மகனான
சீர்வணிகன் கோவலரும் தேவி கண்ணகை மானும்
ஊர் மதுராபுரியடைய உற்றிடையர் வாழுதெரு
சார் விதியின் வழி நடந்து சாருகின்ற நாளதனில்

26

ஆயர் தெரு தன்னில் வர அங்குவந்த இடைச்சியவள்
நேயமுடன் வார்த்தை சொல்லி நேரிழையார் முகம்பார்த்து
தாயாரே களைப்புற்றீர் தங்க மனையிடத்து வந்து
சேயாக எனைநினைந்து செய்பணியை ஏற்றிடுவீர்

27

பசித்த முகம் பார்த்து பார் நடந்த நிலை பார்த்து
வசித்த மனையகத்தே வார்குழலாள் இடைச்சியவள்
ருசித்த உணவூட்டி உபசாரம் பல பேசி
கசிந்த மனத்துடைய காரிகை கைகூப்பினளே.

28

எங்கள் குலம் இடைக்குலம் என்றாலும் கண்ணபிரான்
தங்குகுலம் எங்கள் குலம் தாய் யசோதை நமது குலம்
மங்காத புகழுடைய மாமாயன் உறி திருடி
நம் தாயார் உரல் கட்டி நாடறிந்த இடையர் குலம்

29

எக்குலத்தாரானாலும் ஏகுவழி களைப்படைந்து
புக்கடைந்து நம் தெருவில் புறம்போக வொட்டாது
தக்க தண்ணீர் அன்னமிட்டு தம்மாலியன்ற வைத்து
மிக்க உபசாரமிட முன்னோர்கள் காட்டு குலம்

30

வழிநடந்த இருவரையும் வாகான இடைப் பெண்கள்
மொழி பகன்று சுற்றி நின்று முறைமைகளும் கொண்டாடி
களிகொண்டு நிற்கை கண்டு காரிகை கண்ணகை அம்மன்
விழிகலங்கி ஆனந்த வெள்ளமதில் திளைத்தனரே.

31

இருந்தார்கள் இருபேரும் இடைச்சியம்மை மனையகத்தே
வருந்தாது புசித்திருத்தல் வசையலவோ என நினைத்து
கரும்பான சொல் மடவாள் கண்ணகையின் முகநோக்கி
விருந்தாக வேண்டாமே வேண்டு பொருள் ஈட்டுவனே.

32

போய்வருவேன் வியாபாரம் பொருளீட்ட எனவுரைக்க
தாயவளும் மிகமகிழ்ந்து தன் காலின் சிலம்பெடுத்து
நாயகனின் கை கொடுக்க நலித்த துன்பம்தான்சேர
நேயத்தால் ஒரு சிலம்பு நின்காலில் இருக்க என்றான்.

33

ஒற்றைச் சிலம்பதனை உயர்வணிகன் கரம் எடுத்து
மற்றைச் சிலம்பதனை மனைகாலில் பூட்டி வைத்து
கற்றைக் குழல் மடவார் கண்ணகையின் முகநோக்கி
விற்றுவர எனக்கு விடையுதவுவாய் எனவே

34

விடையுதவு எனக்கேட்க வெந்துமனம் பதைபதைத்து,
மடைதிறந்த வெள்ளம்போல் மனத்துயரம் பாய்ந்தோட
நடையன்ன நாயகியாள் நல்வணிகன் தனை பார்த்து
தடை சொல்லாய் தக்கோனே சாருவனே உன்னோடு.

35

பெண்ணிற் கணிகலமே பேரழகுக் கோருருவே
என்னில் கலந்த இறைமகளே என்தாயே
உன்னைப் பிரிய உவந்திடுமோ என்மனது
வன்வினையில் பிரிந்திடுதல் வணிகர் கடன் அறியாயோ.
36

என்னப் புலம்பி இருபேரும் நிற்பளவின்
வன்னச் சிறு இடைச்சி வதிவானாள் இடையர்குல
முன்னுற்றுற வந்து முகம் பார்த்து முடிதிருத்தி
பின்னிப் பிடித்து பெருமடியில் சாய்த்து அணைத்து
37

நானுண்டு நமருண்டு நங்கள் குலம் தானுண்டு
வானுண்டு வளமுண்டு வந்தணைந்த உன்தனுக்கு
தேனுண்டு பாலுண்டு திண்ணமுடன் காவல்செய்ய
கோனுண்டு கோபாலன் துணையுண்டு குறையாதே.
38

வேறு

மாயன்தனை வளர்த்த மாசில்லாக் குலத்தாளே
நேயமீக் கொண்டவளே நிறைகுடமே நிர்மலையே
தாயே தகுதுணையே தயாபரியே என்தேவி
சேயாகக் காக்கவந்த தெய்வமகள் நீயன்றோ.
39

காப்பதற்கு வந்த கண்ணன் குலத்தவளே
மூப்புடைய மாதாவே முறை மாறன் மதுரையிலே
நாப்புரள கூறி நற்சிலம்பு விற்றுவர
காப்பாவாள் என்று கையடையாய் தந்தனனே.
40

காராழி வண்ணன் கனகன் உடல்பிழந்தோன்
நீராழி சூழ்ந்த நெடுநிலத்தை அளந்தெடுத்தோன்
பாராளுராமன் பாற்பசுமேய் கோபாலன்
சீரான் குலத்தவளே சேயிளையாள் அடைக்கலமே.
41

அடைக்கலமாய் மனைவைத்து ஆயர்குல தாயாரை
புடைக்கணுற வந்து போற்றியஞ்சலி செய்ய
இடைக்குலமே எங்கும் இருக்கின்ற எம்தாயை
சடைத்தலையன் தேவியரை தாங்கதவம் செய்ததுவோ.
42

தாயான கண்ணகையை தகு கோவலன் பார்த்து
சேயாக நீ இருப்பை சிறந்த தந்தை தாயருண்டு
ஆயர்குல தோழியுண்டு அணிகுலத்தார் யாருமுண்டு
போய்வருவேன் மதுரை நகர் பொற்சிலம்பு விற்றுவர
43

பத்தாவை பணிந்தெழுந்து பல வார்த்தை தான்கூறி
முத்தாக முறுவலித்து முன்னை வந்து விடைகொடுக்க
வித்தாக வினையுந்த விதிவந்து வழிகாட்ட
சித்தா குலத்துடனே சேர்மதுரை வீதி வந்தான்.
44

ஆலவாய் அரும்பொருளை அண்டிப் பணிந்தெழுந்து
கோலமிளிர் சிலம்பு விற்க கூட்டும் என தெண்டனிட்டு
சீலமணி காராளர் சிறந்தவர்கள் கவிவாணர்
தாலரசர் தெருக்கடந்து தட்டாதெரு சார்ந்தனரே.
45

கனகன் - இரணியன்

வந்து தட்டார் வீதியிலே மாசாந்துவ மைந்தன்
தந்து விலை கொள்வதற்கு தனிச்சிலம்பு தனைக்காட்ட
உந்துவினை தள்ள ஒரு தட்டான் முன்வந்து
எந்த விலை கூறும் யார் காண் நீர் என்றனனே.
46

கணிகையுடன் கூட்டால் கைப்பொரு ளெலாமிழந்து
தனி சோழநாடு விட்டு சார்வணிகர் குலம்விட்டு
நனி சிறக்க வியாபாரம் நான் நடாத்த பொருளீட்ட
தனிச்சிலம்பு விற்க வந்த தகு வணிகன் நான் என்றான்.
47

சீராரும் கோவலனார் செப்பு மொழிதான் கேட்டு
பாராளும் மன்னவர்க்கு பணிசெய்யும் தட்டானும்
நேரான இவன் தன்னை நிறுத்தியே தான் தொலைத்து
காணாத சிலம்பதனை கரந்தெடுக்க உன்னினனே.
48

வேறு

நேர்வழி மறந்து நீதி நெறிமுறை பிறழ்ந்த தட்டான்
பேரது வஞ்சிப் பத்தன் பெறும் பாண்டி தேவியாரின்
காலது சிலம்பு செய்து காய்ந்திட வைத்த போது
மேலது பறந்த கங்கம் விரைந்து வந்தெடுத்துச் சென்று
49

தனித்த சிலம்பெடுத்த தாய்க் கருடன் விரைந்தெழுந்து
பனித்தேழு மலைதாண்டி பல கடலும் தான் பறந்து
குனித்த பல கொம்பருடை குளிர்காவில் பழுமரத்தில்
திணித்து வினைதான் முடித்து சிந்தித் திருந்ததுவே.
50

கங்கம் - பருந்து,
பழுமரம் - ஆலமரம்

தட்டானின் மனை யகத்தே தங்கியுற்ற பெருமரத்தில்
மட்டான கூடுகட்டி மகிழ்ந்து அதிலே முட்டையிட்டு
சிட்டான மூன்று குஞ்சு சேவகமாய் இரையூட்டி
கட்டான அழகு கண்டு களிப்புற்றிடும் கங்கம் 51

வஞ்சித் தட்டான் மக்கள் வண்ண மரமீதேறி
குஞ்சுகளைக் கீழ்விழுத்தி கூட்டையும் தான் கலைத்து
தஞ்சமென அவை குழற தடியினால் தான் அடித்து
துஞ்சல் கண்ட தாய்க் கருடன் சோகத்தில் சினம்புரிந்து 52

தக்க சமயம் பார்த்து தனித்த கருடனது
புக்க துன்பம் தனை வாட்ட புத்திர சோகத்தாடி
மிக்க புகழ் தேவியரின் மின் கால் சிலம்பதுதான்
சிக்க சினம் முடிக்க சேர்ந்தெடுக்க விதியதுவே. 53

சிலம்பதனைக் காணாது சேரு தட்டான் மனை ஓடி
புலம்பு மனத்தானாகி புத்தி செய்கை தடுமாறி
பலமிழந்து பாண்டியனார் படுத்துமே துன்பமென
நலமிழந்து நாவுலர்ந்து நடுங்கிக் கிடந்தனனே. 54

மங்காத புகழ் கொண்ட மாமதுரை வீதியிலே
தங்காதல் மனைவியிடை தனிச்சிலம்பு விலைகூறல்
இன்காது தனில் விழவே தட்டானும் துடிதுடித்து
முன்பாக ஓடி முறை வினவி நின்றனனே. 55

கைச்சிலம்பன் கோவலனை கண்ட தட்டான் மனமகிழ்ந்து
இச்சிலம்பால் என் துன்பம் நீங்குமென மனத்தெண்ணி
சொற்சிலம்பம் பல பேசி சூழ்ச்சி வஞ்சகமாகி
நற்சிலம்பைத் தானடைய நாடி ஒன்று கூறுவனே.
56

சிலம்பு கூறல் சருக்கம் முற்றிற்று.

## கொலைக்களச் சருக்கம்

கோவலரே கேளும் கூறும் சிலம்பதனை
ஏவலர்கள் கொள்ள இடமில்லை ஆதலினால்
காவலனே கொள்வர் காட்டும் எனதில்லில்
நாவலனே நிற்பீர் நானழைத்து வாறேன் காண்.
1

தட்டான் சொல் நம்பி தனி வணிகன் கோவலனும்
விட்டவனின் வீட்டில் விதி இருத்த தானிருக்க
முட்ட முறையரசு செய்கின்ற மன்னவனை
கிட்டிக் கெடுக்க கிளர் சனி போல் சென்றனனே.
2

மன்னவனே வாழி மறை பயின்றோய் நீ வாழி
முன்னவனே வாழி முறை அரசே நீ வாழி
என்னவனே வாழி எமக்கிறையே நீ வாழி
தென்னவனே வாழியென தெண்டனிட்டான் தட்டானும்.
3

என்னா இயம்பி இரு கரமும் தான் கூப்பி
முன்னாக நின்று முறை புகலும் தட்டானை
மன்னானவன் நோக்கி மன்னர்க் குரைத்திடுதற்
கென்ன குறை கூறும் எனவே இயம்புவனே
4

சீர்புகழும் கீர்த்தி சிறப்பு கல்வி ஞானமுடை
பார்மகிழும் பாண்டி பதி காக்கும் பெருமாளே
தார் குழலாள் தம் மனைவி தனி கால் சிலம்புசெய்து
ஊர் ஈரம் போக்க உலர வைத்தேன் உத்தமனே.
5

மன்னவனே நீர் கொடுத்த மாது நல்லாள் காற்சிலம்பை
சொன்னபடி சரிபார்த்து சுடு வெயிலில் காயவைத்து
என்னருமை புதல்வர்களை இரும் காவல் என பணித்து
கன்னலின்று கொண்டு வர காத்திருக்கும் வேளையிலே.
6

யாது செய்வேன் என்னரசே எம்காவல் தனைத்தாண்டி
நீதிபுரி உம்மனைவி நேசிக்கும் பொற்சிலம்பை
ஓதரிய ஒரு கள்வன் உள் புகுந்து தான் திருடி
வீதிதனில் விற்கவரும் வேளைதனில் கண்டு கொண்டேன்.
7

கள்வனிந்த சிலம்புதன்னை கடைவீதி தனில் விற்க
மெள்ள வந்த சமயத்தில் மேயசிவன் அருளாலும்
உள்ளிருந்த என்தன் உபாயச் சிறப்பாலும்
தள்ளி வந்து என் மனையில் தங்கவைத்தேன் பெருமானே.
8

கையதுவும் மெய்யதுவாய் கள்ளனையே நான்பிடித்து
ஐய உன்தன் முன் கொணர அடிமை நான் எண்ணிவிட
வைது உம்மை இழித்துரைத்து வசைபாடி நிற்பவனை
செய்யுமுறை புரிந்திடென சேவடியில் விழுந்தனனே.
9

## வேறு

அடித்தலத்தில் வீழ் ஆய்வினை சூழ்வினை அறியா
முடித்தலத்தினை நிமிர்த்தியே மூண்டிடுவெகுளி
பிடித்துயிர்த்துமே பிறங்குகண் அழலெழவிழித்து
துடித்தெழுந்துமே சூதனுக்கித்திறம் மொழிவான் 10

அரசு ஆட்சியை இகழ்ந்தவன் அணி இணை அரசி
பரசு நூபுரம் பற்றினன் பண்பிலா கயவன்
சிரசு உருண்டிட சிந்து நாந்தகத்தினைச் சேர்த்தி
பரிசளித்திடு என்றனன் பாண்டியப் பதகன். 11

உற்று ஆய்ந்திடல் இன்றியே ஒருத்தன் சொல்நம்பி
பற்று மேன்மையும் பாண்டிய குலமுறை பாரா
சொற்ற வாசகம் தோகையும் தாமுமாய் சுற்றம்
முற்றழிந்திட மொழிந்தனன் முதிர்ந்திடு சினத்தால். 12

ஓதிஎன் பயன் உறுசினம் உற்றறிவழித்து
நீதி மாற்றியே நீள் விதி வழிக்கொடு நடத்தி
நாதியானவர் நலிந்திட நல்லவர் தூற்ற
சேதியானது செழியன் வாய் செப்பிய செய்தி 13

வழுதிமன்னவன் வாங்குவீர் தலையென வகுக்க
பொழுது சாய்வமுன் புரிவன் இத்தொழிலென பொன்னன்
எழு(ந்)து ஓடியே ஏவலர் இருவரை அழைத்து
பழுதிலாதவன் பக்கமாய் கூட்டியே வந்தான். 14

பொன்னன் - தட்டான்

பார்த்தனன் இரு பாதகர் தம்மையும் பகர் வாள்
கூர்த்த நோக்குடை கொடு தட்டான் கொள்கையும் தெரிந்து
சீர்த்த கோவலன் சிந்தையாகுலமது சேர
ஆர்த்து கண்ணகை அம்மையை எண்ணியே அயர்வான்.
15

கொங்கணச் செல்வி குட மலையாட்டி குளிர் துவர்வாய்
பங்கையச் செல்வி பகர் தமிழ்ப்பாவை பனி நிலவு
அங்கையர்க் கண்ணி அமுதசீர் வல்லி அருந்துணையாம்
நங்கையர் நாகமணிச் சிலம்பாளை நாடுவனே.
16

வேறு

மாணிக்க முத்தே மரகத கோமேதகமே
காணற்கரிய கருமணியே கண்ணகையே
வாணர்க்கொரு விளக்கே வணிகமனை தானடைந்த
ஞானக் கொழுந்தே நாயகற்கு இதுவிதியோ.
17

மாதேவி பால் சென்று மதி மயங்கி தள்ளாடி
மூதேவி போல் வந்து முறை பிறழ்ந்த நாயேனை
தாயாகப் போற்றி தண்ணழி செய் தாட்சிலம்பு
தோதாய் கொடுத்து விட்ட தொண்டினை நான் மறப்பேனோ.
18

கண்ணகியே மானே காற்சிலம்பு விற்கவந்து
மண்ணையாள் மன்னன் மதிகெட்ட உத்தரவால்
உன்னையான் பிரிவதற்கு ஊழ்வினையும் உகுத்ததுவோ
என்னை நான் இழந்ததற்கு இப்பரிசு காணாதே.
19

என்னப் புலம்பி இருந்து மனந்தேறி
முன்னித்து ஊழ்தள்ள முன்னாலே பாதகர்கள்
பின்ன பெயர் தட்டான் பிசாசாக தான்தள்ள
வன்ன கொலைக்களத்தில் வந்தாரே கோவலரும்.
20

இட்டத்து தெய்வமதை எண்ணித் துதியுமென
துட்டத்து வன்மத்தோர் துய்த்த மொழிதான் கேளா
வட்டத்து வெண்ணிலவே வடிவாம்பிகை தாயே
கிட்டத்து வந்தணைவாய் கேடில் சீர் கண்ணகியே.
21

எடுத்தான் மழுவதனை இருகரத்தினால் உயர்த்தி
பிடித்தான் தறித்தான் பிறங்குதலை தானுருள
அறுத்தான் அரிந்தான் அரியும் பிரம்மாவும்
கறுத்தானின் காளிகண்டு கடும் கோபமுற்றனளே.
22

உகுத்தாள் கண் செந்நீர் உறுமினாள் உரும் இடிபோல்
நகுத்தாள் நடனமிட்டாள் நாவதனை தான்நீட்டி
பகுத்தவாய் தான் திறந்து பல்கடைவாய் தான்மிளிர
எடுத்தாள் திரிசூலம் ஏங்கியது உலகமெல்லாம்.
23

வணிகன் தரமுருள வருகாளி தான்சீற
பணியும் மெய்யன்பர் பதம்பணிய கண்ணகையார்
அணியும் நாண்மாலையும் மாங்கல்ய சூத்திரமும்
திணியும் நிலத்தில் விழ தீ நிமித்தம் நேர்ந்ததுவே.
24

அறந்தாவு கண்ணகையால் அருமதுரை தானெரிய
புரிந்தாடுகின்ற பொறிவினை பாண்டியன் மாய
நெறிந்தாடு நீதியது நிலமதிலே உறுதிபட
சொரிந்தாடு தமிழ்வழக்கு சொல்லுவனே உலகோரே.
25

கொலைக்களச் சருக்கம் முற்றிற்று.

## உயிர் வருக்க சருக்கம்

சிலம்பதனை விற்க வந்து சீராரும் மதுரையிலே
நலம்பாடு நாயகனார் நண்ணுதட்டான் மொழி கேட்டு
குலம்பாடு தான்மறைய கொடுஞ் செழியன் கட்டளையும்
புலம்பாடு சாவடைந்த புன் கனவு கண்டனரே.
1

கனவுகண்டு கண்ணகையார் கடிதெழுந்து பதைபதைத்து
நினைவு சுற்ற நீங்காத துன்பமது மேலாக
மனையிலுள்ள இடைச்சியர்க்கும் மற்றோர்க்கும் இதுகூற
துணையிலுற்ற எல்லாரும் துயர்க் கனவின் நிலைநாடி
2

மதுரை சென்று வந்தவர்கள் வணிகேசன் கோவலனை
சதிசெய்து தட்டானின் தனிவலையில் வீழ்ந்ததுவும்
பதிகாக்கும் பண்ணவனின் பாதகத்து உத்தரவால்
விதி காட்டும் விளையாட்டும் விரைந்தோடி செப்பினரே.
3

கேட்டாளே கண்ணகையார் கிளர்புளகம் சொரிவேர்வை
காட்டாறு பாய்வதுபோல் கண்களால் நீர்பொழிய
மாட்டாறுவாகி மனத்தில் சினம் எரிய
ஓட்டமாய் ஓடி உறுகளத்தை தேடினளே.
4

கற்புமகள் நானாகில் கண்ணகைத்தாய் நானாகில்
பொற்புநிறை நல்வணிகன் போத மனை நானாகில்
மற்பொருவு தோளான் மடிந்த இடம் கண்டிடுவன்
நற்பெயரு நாயகனை நாடி வினை முடிப்பேனே.
5

களம்தேடி கண்ணகையார் கவின்காட்டு மத்தியிலே
குளம்போல கண்ணீரும் கொட்டுவதும் கூக்குரலும்
தளம்பாத மனத்துடனே சார்ந்தோங்கு வேங்கைமர
நிலம் தாங்கும் நீழலிலே நீத்த உடல் கண்டனளே.
6

கண்டாளே உடலமதை கன நிலத்தில் கையறைந்து
விண்டாவி விட்ட வியன் மார்பில் தான் வீழ்ந்து
கொண்டாவலித்து கோ வென்றுதான் குழறி
மண்தானதிர மார்புடைத்து மயங்கினளே.
7

நந்தா வணிககுல நாயகமே நண்ணினர்க்கு
சிந்தாமணியே திருவே என் தெள்ளமுதே
வந்தாய் சிலம்பு விற்க வலி ஊழும் சேர்ந்துன்னை
உந்தா உறுத்தி உடலமதாய் வீழ்த்தியதோ.
8

காவலனே என்தன் கனகவணி கேசரசே
பாவலனே என்தன் பதியே மதிமுகத்தை
கேவலமே செய்து கெடுத்தனரோ பாவியர்கள்
கோவலனே என்முன் குறுகி வரமாட்டாயோ.
9

கற்புடையாள் கண்ணகியென் காவலனே என்முன்னே
நற்புடையாய் வந்து நவின்றிடுவாய் நடந்ததனை
சொற்படியே வந்துன் தூயமுகம் காட்டாயேல்
நிற்பதிக்கு நான் வருவேன் நேசா உனைக்காண.

10

என்றுமே கண்ணகியார் இளைத்து வஞ்சினம் கூறி
நின்று புலம்பும் நிலைமை தனைப்பாரா
மன்றினிலே ஆடும் மகேசன் திருவருளால்
பொன்றியிடு கோவலனார் பொள்ளென் றெழுந்தாரே.

11

கண்டாள் கவின் முகத்தை காரிகையாள் முன்ஓடி
சென்றாள் விழுந்தாள் சீர்பாதம் கைப்பிடித்து
நின்றாள் தலைகூர நெட்டூரம் செய்தவர் யார்
என்கோவே என்று எழுபதியை தொழுதனளே.

12

சீர்மதுரை வீதியிலே சிலம்பு விற்க வந்த என்னை
ஓர் தட்டான் சூழ்ச்சியினால் உற்றமனை தான் கொடுபோய்
தார்சூடு பாண்டியனின் தருமனையாள் சிலம்பதனை
நேர் திருடு கவ்வனென நெடுஞ்செழியற் கோதினனே.

13

ஓதுபொய் வார்த்தை நம்பி உற்றாய்ந்து பாராமல்
தீதுபுரி சண்டாளர் சிரம் துணிக்க பணித்தனனே
ஏதுமறியா என்மேல் இப்பழியைச் சுமத்தியதால்
மாதுயரம் கொண்டேன் மணிச்சிலம்பும் பறித்தனரே.

14

கேட்டாள் இவ்வார்த்தை தன்னை கிளர் மார்பு மேலேற
வாட்டாகம் மூச்செறிய வரிகண்ணும் சிவப்பாக
மோட்டரசன் முன்பாக முறைநீதி கேட்டெழுந்து
வாட்டமுறு நும்பழியை வாங்கிடுவேன் என்றாரே.

15

உயிரற்ற உடல் எடுத்து ஒடு சிரம்தான் பொருத்தி
அயலுற்ற ஆலின்கீழ் அழகாக தான்வைத்து
துயருற்று தான் வணங்கி தூயவிடை தான் பெற்று
மயலுற்ற மாறன்முன் வழக்குரைக்க செல்லுவளே.

16

உயிர்வருக்கச் சருக்கம் முற்றிற்று.

## வழக்குரைச் சருக்கம்

காயும் கதிரவனை காரிகையாள் தான்பார்த்து
நீயும்தான் இங்குற்றாய் நிலை உரைப்பாய் நீ என்று
தேயுற்ற என் கணவன் கள்வனோ செப்புகென அசரீரி
பாயுற்று எவ்விடமும் இல்லை இல்லை எனப் பகரும்

1

மாமாறன் மதுரையிலே மணி அரி ஆசனத்திருக்க
பூமாது நிகர் தேவி பொருந்தும் நல் இருக்கையினில்
காவாது காப்புடையோர் மந்திரிகள் தளபதிகள்
ஓவாது வாழ்க என உரைக்கின்ற சமயமதில்

2

ஒற்றன் ஒருவன் ஓடி உயர்தலைவா போற்றி என்று
நிற்றுப் பணிந்து நெடுமூச்சு தான் வாங்க
சுற்றும் சபை பார்த்து சுந்தரப் பெண் தலைவிரித்து
ஒற்றைச் சிலம்புடனே உற்றாளே வாசலிலே.

3

என்ற மொழிகேட்டு இறைவனாம் பெருவழுதி
மன்றம் தனிலழைத்து மாற்றம் அறிமின் என
நின்றங்கவர் சென்று நிர்மலையை வாருமென
குன்றஞ்சிலை வளைத்தான் கொற்றவை யாயுற்றனளே.
4

சொல் மாறன் சொல்ல சோழப் பெருவணிகன்
வல்லூழும் தள்ள வணிகம் புரிய வந்த
நல்லானை நீயும் கள்வனென கொன்றவனின்
இல்லாளும் நானே என்பேர் கண்ணகையாகும்
5

கள்வனைக் கோறல் காவலனின் கடமையது
குள்ளத்தனம் வேண்டாம் கோதை நீ சொல்லவந்த
உள்ளத்தில் கொண்ட உனதெண்ணம் கூறுமென
வெள்ளச் சினம் மூழ விளம்பிடுவார் நாயகியார்.
6

தன்னூண் தொடையறுத்த தங்குபுகழ் சிபிமன்னன்
மன்னுதுயர்ப் பசுவுக்காய் மைந்தனையே தேர்ச்சில்லில்
கொன்று மனுநீதிகண்ட கொற்றவர்கள் நாட்டிலுறை
நன்னுபுகழ் கோவலனின் நாயகி கண்ணகை நானே.
7

குலக்கேடு செய்கின்ற கோடரியின் காம்பொத்த
நிலம் காக்கு பாண்டியனே மாதவிக்கு பொருள் தோத்து
வலம்காலில் சிலம்பு விற்க வந்தவரை கள்வனென
கலங்காது சிரமீந்த காவலனின் கண்ணகி நான்.
8

கள்ளிறைக்கும் பூஞ்சோலை காவிரிப்பூம் பட்டணத்தில்
வள்ளலுக்கு நிகரான வணிகேச குலதிலகன்
உள்ளவராம் மாசாத்தர் உறுபிள்ளை கோவலன் பேர்
நல்லவனை கைப்பிடித்த நாயகியும் நானாவேன்.

9

நின்ற புகழ் பாண்டியனே நீச தட்டான் மொழிகேட்டு
உன்மனைவி காற்சிலம்பை உற்றெடுத்த கள்வனென
என்னவனை கொன்ற இப்பழியை வாங்குதற்கு
முன்னிவந்த முக்கண்ணி நான் மோட்டரசே இன்னும் கேள்.

10

அல்லற்பட்டாற்றாது அழுதிடும் என்கண்ணீரை
எள்ளற் பொருட்டாய் நினைத்தால் இது உனக்கு
பல்லக்கு வாழ்க்கை படை குலவு சுற்றமெல்லாம்
நல்லற்கு தீங்கு செய்யில் நாடாதகன்றிடுமே.

11

உற்ற துணையை உறவான நாயகனை
கற்ற குலத்தானை கள்வனென்று காரணத்தை
சற்றும் அறியாமல் தண்டம் புரிந்த உயிர்
பெற்றுத் திரும்பிடுமோ பெரும்பாவம் நீங்கிடுமோ.

12

நீயும் ஆராயவில்லை நின் சபையும் கூட்டவில்லை
கூட்டி நீ பேசவில்லை குறித்தறிய நேரமில்லை
மாயத்துத் தட்டான் வஞ்சனையில் நீவீழ்ந்து
சீயக்குலநீதி சிறுநரிக்கு மாற்றினையே.

13

நத்தும் கடல்சூழு நல்லுலகம் வசைபாட
எத்து தட்டானின் இழிமொழியை நீ நம்பி
பித்துப் பிடித்தாய் பெரும்பாவம் செய்திட்டாய்
கத்தும் எனது குரல் காட்டும் அறக்கட்டளையே.

14

பத்தாவைக் கொன்று பறித்த சிலம்பதனை
முத்தான உன்மனைவி முன்காட்டி ஆயாது
பித்தானாய் பெருமூடன் சொல்கேட்டு தீமைக்கு
வித்தானாய் வேத நெறி விட்டாய் வெறிபிடித்தாய்.

15

கண்ணகையார் சொற்ற கடு வாசகம் கேட்டு
மன்னவனாம் மாறன் மணிமுடியை தானசைத்து
உன்னுசினம் மீதடைந்து உடைவாளைத் தானுருவி
பெண்ணெனவே விட்டேன் பெயர்தோடு நில்லாதே.

16

மன்னர்க்கு நீதி சொல்ல மந்திரிகள் பலருண்டு
உன்னை எவரழைத்தார் உபதேசம் கூறிடற்கு
சின்னப் பெண் என்றும் சிற்றறிவு பேசுதென்றும்
எண்ணி இது கேட்டேன் என் சினத்தை நீயறியாய்.

17

ஐயா முடியரசே அன்பான உன்மனைவி
மெய்கால் சிலம்பில் விரவும் அரி சொல்லுமென
நையாத முத்து நடுவுறுத்தி செய்த தென்று
கையால் எடுத்தசைத்து காட்டினனே நெடுஞ்செழியன்

18

அரி - பரல்

பாண்டியன் சொல்வார்த்தை பத்தினியார் தான் கேட்டு
மூண்ட சினமேற மூக்கில் புகை பறக்க
நீண்ட நெடுகண்கள் நெருப்பாக ஓங்கிட கை
பூண்ட சிலம்பை புவியில் அறைந்தனளே.

19

அறைந்த சிலம்புடைய அணி நாகமணி சிதறி
உறைந்த சபையகத்தார் உதறியே வாய்பொத்த
நிறைந்த நெடுஞ்செழியன் நீழ்விழிகள் நிலைநிற்க
பறந்துடைந்து பாண்டியனின் பக்கமெலாம் சுற்றியதே.

20

சினமடைந்த கண்ணகையார் சீர்மாறன் கைபிடித்த
மனைவியளின் நூபுரத்தை மறுகையான் தான் பிடுங்கி
நினைவிழந்த பாண்டியன்முன் நிலத்தினிடையே யடிக்க
வனைவிழந்த முத்துக்கள் வளைந்து பரந்ததுவே.

21

நாகமணியும் நல் நித்திலப் பரலும்
மோதிச் சிதற முடிமாறன் தடுமாறி
நீதி தனைக் கொன்றேன் நெடுகள்வன் நானேகாண்
ஓதிப் பனித்து உடலம் ஒடுங்கினனே.

22

சிங்காசனம் சரிய சிறந்த செங்கோல் தான்வீழ
மங்கா புகழ் கொண்ட மாறன்குலம் குனிய
சங்காகி நின்ற சபை யோர் முகம் கவிழ
தங்கால் சறுக்க சரிந்தனனே பாண்டியர் கோன்

23

நித்திலம் - முத்து

தூண்டாத கற்பு நெறி சுடுகனலாய் சுட்டுவிட
வேண்டாத செய்து வினைபுரிந்தேன் நான் என்று
தாண்டா வசை யடைந்தேன் தங்கு உயிர்தான் அலைந்து
மாண்டான் மடிந்தான் மாறகுல பூபதியே.
24

தன் கணவன் முன்னே சரிந்து விழ கண்டோடி
மன்குலத்து வந்த மதிமுகத்து பெண்ணரசி
பன்மணிகள் பூண்ட பாண்டியனின் மேல்வீழ்ந்து
இன்னுயிரை விட்டு இறை கற்பின் மேன்மை கண்டாள்.
25

பாண்டியனும் தேவியுமாய் படியில் விழுந்திறக்க
முண்ட பெரு சினமாகி முடி விரித்த கோலமுமாய்
காண்டரிய வடிவுகண்ட கள்வன் தட்டான் பயந்தோடி
நீண்டொலியாய் வாய்குழறி நிலத்தில் வீழ்ந் திறந்தனனே.
26

கோப்பெருந் தேவி வீய கொடிய தட்டானும் துஞ்ச
தீப்பெரும் கடவுளன்ன சிந்திடு கோபம் மூழ
நாப்பிடை மன்றில் உற்ற நற்றவர் அமைச்சர் கேட்க
வாக்கிடை மதுரை மூதூர் வன்தழற் கிடுவேன் என்றாள்.
27

அஞ்சிலே ஒன்றதான அங்கியை வேண்டித்தாயார்
நெஞ்சிலே ஒன்றதான நிமிர்முலை திருகி சுற்றி
பஞ்சிலே ஒன்றிற்றான பாயெரி படர்ந்து பற்றி
நஞ்சிலே ஒன்றிதாகி நகரெலாம் நலித்ததன்றே.
28

பார்ப்பனர் அறவோர் மற்றை பசு பத்தினியர் பெண்டிர்
மூத்தவர் குழவியாதி முறைமையர் தம்மைக் கொல்லா
சேர்த்தவர் யாரும் மாழ தீப்பெரும் கடவுள் வேண்டி
போர்த்த மார்பகத்தை கீண்டு பொள்ளென வீசினாரே.

29

இடத்துறு கொங்கையான இக பர ஞானம் அன்ன
தடத்துறு மதுரை சுற்றி தருமத்தின் நெறியை விட்ட
மடத்துறு மன்னன் தங்கு மண்டபம் கோயில் சூழ்ந்து
பரத்தழல் பாய்ந்து கௌவி பரம்பியே சுட்டதன்றே.

30

வீசிடு மார்பு விண்ட வியன்பெரு அழலாய் மூண்டு
பாசடை பொதுளி ஓங்கி பரம்பு அக்கினியாய் நீடி
காசடை மதுரைமூதூர் கண்டிடு இடங்களெல்லாம்
நாசமதாக்கி நக்கி நன்புகை மண்டிற்றன்றே.

31

மதுரை அக்கினியால் கொள்ள மன்னனும் மனைவிமாய
பதிஉயிர் குடித்து வந்த பழியது துடைத்து நீங்கி
நதி வைகை கரைமேற் சென்று நண்ணு செங்குன்ற தென்னும்
வதி மலை மீதிலேறி வளர் வேங்கை நீழல் சேர்ந்து.

32

மரமதாம் வேங்கை நீழல் மன்னுயிர் யாவும் ஈன்றாள்
பரமதாம் சிவத்தை உன்னி பதினான்கு நாளிருந்து
விரதமாம் நிட்டை கூட விரைந்து கோவலனும் வந்து
தரமதாம் புட்ப மானம் தாங்கியே சென்றதன்றே.

33

(கோவலன் - கோவலன் வடிவில் சிவபெருமான் வந்து எனக் கொள்க)

காட்டு இவ் வதிசயத்தை கண்டுற்ற இடையரானோர்
நாட்டினர் யாரும்கூடி நங்கையைப் பணிந்து போற்றி
வீட்டுறு நெறிக்கு தாயே விளக்கதாய் உற்றாள் என்று
தாட்டுணை தன்னில் வீழ்ந்து தயாபரி போற்றினாரே.
34

குன்ற வாணரும் கொடிச்சியர் யாவரும் கூடி
நின்று கண்ணகைத் தெய்வத்தின் கீர்த்திகள் நீடி
மன்றுளே சென்று மத்தியில் அம்மனை அமைத்து
அன்று தொட்டுமே ஆர்வமாய் பூசனை புரிந்தார்.
35

மலைவளம் காண வந்த மன்னனாம் சேரநாட்டு
நிலவு செங்கோடன் கண்டு நிர்மலை பாதம் உன்னி
கலைபயில் கல்லில் கோயில் கண்ணகித் தாய்க்கு கட்டி
நிலைபெற நிறுத்தி பூசை நிறைவதாய் செய்குவானே.
36

- வழக்குரைச் சருக்கம் முற்றிற்று -

## அதிசய அற்புதச் சருக்கம்

கனகனாம் விஷயனென்னும் கண்டிடு மன்னர் சீறி
சிரமதில் கல்லை ஏற்றி சிறந்திடு இமயம் புக்கு
பரமதாய் விளங்கும் எங்கள் பத்தினி தெய்வதாய்க்கு
தரமதாய் கோயில் செய்தான் தவத்துறை சேரமன்னன்.
1

சிலம்பினை உடைத்து நீதி செப்பியே வழக்குரைத்து
நிலம்விழு வழுதி மாய மதுரையை எரிக்கு ஊட்டி
புலம்பிடு மனத்தரான இடைச்சியர் காட்சிகாட்டி
தலம்புகு தெய்வமாது தயாபரி சரணம்போற்றி.
2

சீர் செங்குட்டுவனென் றோதும் சேர்வலி சேரமன்னன்
பார்புரி அரசர் எல்லாம் பத்தினி தெய்வத்திற்கு
ஊர்தனில் கோயில் கொண்டு உயர் தவபூசைசெய்ய
வார்அறை முரசுகொட்டி வகுத்திடு காலைதன்னில்.
3

ஈழத்தை ஆண்டிருந்த இயல் கயவாகு என்போன்
மேளத்தின் ஓசை கேளா மென்மையார் கண்ணகைக்கு
ஈழத்தில் தங்கு மக்கள் இறைவிக்கு கோவில் செய்து
மாழத்தில் வைத்து பூசை மகிழ்ந்திட செய்திட்டானே.
4

பாம்பூரும் குடவூரும் பார் வதிரி செம்பியனும்
தாம்பூரும் மந்திகையும் மாதனையும் அல்வாயும்
சீர்ந்துணவ திரியாயும் சீர்அறத்தி மாளிகையும்
சார்ந்தூரும் வரணியொடு கச்சாயும் தாமாகி.
5

வட்டுவாகல்லோடு வல்லிபுரம் மீசாலை
திட்டமிகு கோப்பாயும் புத்தூர் சிறுப்பிட்டி
கட்டான கல்வளையும் சங்கானை ஏழாலை
மட்டான மல்லாகம் மங்கையாள் சேர்ந்தனளே.
6

பளை யெழுதுமட்டும்வாள் பதி அந்தணன் திடலும்
அளை தங்கு மடுதோடை கரவெட்டி மட்டுவிலும்
தளை கூடல் தட்டாத்தி தம்பசிட்டி வல்லையுடன்
வளை வற்றாப்பளையோடு வதி நயினை மேவினளே.
7

மட்டக்கிளப்போடு மாறிலா தென்இலங்கை
முட்டப்பதிதோறும் மூர்த்தியாய் எழுந்தருளி
கிட்டிப் பணிவோர்க்கு கேட்டவரம் நல்கியிடும்
சிட்டான தனி வடிவே சேர் கண்ணகித்தாயே.

8

உற்றாளின் கோயிலிற்கு உறு கதைகள் ஊரவர்கள்
சொற்றாலும் நாயகியார் சுருண்ட கிழவியராய்
வற்றாப்பளையில் வதி நந்திக் கடலோரம்
நற்றாவு மேய்க்கும் நற்சிறுவர் முன்னாகி.

9

நாத்தளர்ந்து சோர்ந்து நடுக்கமுற்று பற்கழன்று
மூத்துநரைமிகுந்த மூதாட்டி வடிவாகி
காத்து பசுமேய்க்கும் காராள சிறுவர் முன்னே
பூத்தமர் நிழலில் பூமாதிருந்தனளே.

10

மூத்தாளைக் கண்டு முன்னிவந்து ஆமேய்க்கும்
சீர்த்தாய் சிறுவர் சிறுகோவில் கட்டிவிளை
ஆட்டைப் புரியும் அணிமரத்தின் நீழலிலே
நீட்டிடுப் படுப்பாய் யாரென்று கேட்டனரே.

11

கேட்டார் சிறுவர்கிளர் சேர நாடுற்றேன்
சோற்றில் திளைக்கும் சோழ நாடு சேர்ந்தணைந்து
மாற்றுப் புலம்தேடி மன்பாண்டி நாடடைந்து
தோற்றுப் பதிசேர்ந்தேன் சுத்தியிடு ஊழ்வினையால்.

12

ஆச்சியின் பேச்சின் அர்த்தம் புரியாது
நாச்சியரை நோக்க நாடும் விளையாட்டில்
மூச்சிறைக்கும் பாலகரே முன்கோயில் தான்செய்து
பேச்சின்றி பூசை செய்வீர் பெரும்கிழவி நான் பார்க்க.

13

சின்னச் சிறுவர் சிறுகோவில் தாம்செய்து
வன்ன அலகிட்டு வனை கல்லுஉள் வைத்து
நன்னுமிலை சாத்தி நாவினால் பண்பாடி
உன்னிப் படைத்து உறுதீபம் காட்ட எண்ணி.

14

சிரட்டை சிமிழ் எழுத்துசிந்து நந்திக் களி நடுவில்
திரட்டு நீர்மொண்டு சிறுதிரியும் தானிட்டு
உருட்டி எரியுமென உற்றிடுவார் முகம் பார்த்து
மருட்டு கிழவி சொல்ல மைந்தர்களும் செய்தனரே.

15

தண்ணீரும் எண்ணையதாய் தகதகவெனவே எரிய
மன்னி நின்ற மைந்தர்களும் மகிழ்ச்சியினால் துள்ள
எண்ணிவந்த எம்தாயார் என்தலையில் பேன்பூச்சி
துன்னுதென தலைவிரிக்க சுத்திவந்து பார்த்தனரே.

16

பார்தனரே தலை வகிடில் பரம்பு அண்ட ஒளியாக
பேர்த்துவரு சூரியனும் பெருநிலவும் தெரிவாக
ஆர்த்த அண்ட சராசரமும் அதற்குள்ளே தான்தெரிய
வேர்த்து மனம் பதைப்பாகி விரைந்து வீடு ஓடினரே.

17

பாலர் கண்ட அதிசயத்தை பதியுள்ளோர் கூடிவந்து
தேடிவந்து தான்பார்க்க சீர்கிழவி காணாது
நாடியிடமும் பார்த்து நன்றாய் நரைத்த பழம்
ஓடியெங்கு சென்றதென உலக அற்புதமென்றார்.

18
கண்ணகைத்தாய் வந்தெமக்கு கருணை செய்தாளென நினைந்து
மன்னு மரத்தடியினிலே மறி நந்திக் கடலருகே
மின்னுசிறு கோவிலிலே விளக்கு வைத்து பொங்கலிட்டு
தண்ணீர் எடுத்து ஏற்றி தாயாரை வணங்கினரே.

19
வற்றாப்பளை யென்னும் வதி கோவில் தான்கண்டு
நற்றாயார் மேவி நண்ணும் அடியர் கட்கு
முற்றாவினை யகற்றி முறையாக காட்சி நல்கி
மற்றாரும் போற்ற மகிழ்வுற் றுறைந்தனளே.

20
இன்னுமொரு காதை சொல்வேன் இறையருள்சேர் குடாரப்பில்
நண்ணுகின்ற தூவிலுறை நாயகிக்கு பூசை செய்யும்
மன்னு வெற்றிவேலன் எனும் மாந்திரிகம் சோதிடமும்
பண்ணரிய பண்டை முறை பரம்பரையில் வருபுலவன்

21
கொடியோர்கள் பலர்கூடி கோளுரைத்த பெரும்பவத்தால்
முடியரசு கோடேறி மூடு சிறையுட் புகுந்து
அடியன் வெற்றிவேலனவன் அன்பிலுறை தாயான
வடிவாம்பிகை பூசை வகையற்று நின்றதுவே.

22

எந்தக் குறையுமிலா இறைவியன்பன் வெற்றியனை
துன்பத்துத் தள்ளி தொடு விளக்க மறியலிலே
மன்றில் வழக்கிட்டு மாற்றார் மனம்களிப்ப
நின்றோன் மனம் வருந்தி நிர்மலையைத் தொழுதனனே.
23

செய்யாத குற்றத்தை செய்தேன் நான் என்று சொல்லி
பொய்யான வழக்கிட்டு புன்மை தவிர்த்தாள்கவென்று
கையால் தொழுது கண்ணகையை தான் நினைந்து
மெய்யால் மன வாக்கால் விரதம் இருந்தனரே.
24

ஈரேழு நாட்கள் இருந்தார் மறியலிலே
தாயே உன் காவியத்தை தலமதிலே பாடுதற்கு
தோதாய் கவிபுனைந்து சுந்தரியே நான்பாடி
வேதவிதி பூசை விளக்கு வைத்து பொங்கல் செய்வேன்.
25

சிலப்பதிகாரக் கதையை சிந்தையிலே தானிருத்தி
தலத்துறையும் தாயாரை தன்மனதில் தியானித்து
குலத்திலுறை குஞ்சரத்தை கும்பிட்டு குணமான
நிலத்திருந்து அடியெடுத்து நினைகாப்புச் செய்தனரே.
26

காப்பிட்டு நேர்கடனை காரிகையே செய்வனென
தோப்பிட்டு வேண்ட தொடு வழக்கு மன்றுவர
கூப்பிட்டு காவலர்கள் கூண்டேறி நிற்கவிட
நாப்பட்ட வல்லோர் முன் நல் நீதிபதி அமர.
27

வழக்கிலக்கம் கூற வதிந்த மன்றுள்ளோர்கள்
கலக்கம் மிக கொண்டு காணோம் அக் கோவையென
நடுக்கம் மிகவாகி நன் நீதிபதி முன்பு
விளக்கமதாய் சொல்ல விடுதலையும் பெற்றனரே.

28

ஆத்தாளின் அற்புதத்தால் அணைகோவை தான் மறைய
வேர்த்தார் விதிர்விதிர்த்தார் வேளை வந்து காத்திட்ட
பூத்தாளின் பாதமதை பொன்றும் படிவரைக்கும்
நாப்பாவில் பாடி நாயகியை தொழுவேனே.

29

வேறு

அதிசயம் கண்டோ ரெல்லாம் அற்புத நீரராகி
மதியுரை வழக்கர் மற்றும் மன்றுளோர் வியந்து பேசி
கதியடை வெற்றிவேலன் கண்ணகை தாயின்முன்னே
பதிகுடாரப்பு தூவில் பாசுரம் பாடினானே.

30

கோவலர் கதை யென்றோதும் கொஞ்சு நற்தமிழில் பாவால்
பாவலர் வாழ்த்தும் பாவை பனை ஒலை ஏட்டின் மீது
நாவலர் வியக்கும் வண்ணம் நல் எழுத்தாணி கொண்டு
பூவுளோர் வியந்து பாட புண்ணியர் எழுதினாரே.

31

எழுதிய ஏட்டைக் கூட்டி எல்லையில் காப்புச் செய்து
பழவினை நீக்க அம்மை பாதத்தில் வைத்துப் பாடி
உளமதில் அன்பு கூடி உற்ற வைகாசி மாதம்
தலமதில் பூசைசெய்து தங்கடன் செய்திட்டாரே.

32

பூசகர் மீண்டு வந்து புகழுடைக் காதை தன்னை
தாயவள் தனக்கு பாடும் தன்மையும் பொங்கல் பூசை
ஊரவர் யாரும் சேர்ந்து உருக்கமாய் வணங்கி போற்றி
தூவுறை தாயை வேண்டி தொழுதுமே இருந்திட்டாரே. 33

வேறு

சிற்றூர் குடாரப்பு சேர் வெற்றி வேலன் செய்த
நற்தாயாள் கண்ணகியின் நல் காவிய ஏட்டை
மற்றூரில் உள்ளவரும் மங்கைநல்லார் கோவிலிலே
உற்றோத வேண்டுமென உவந்தெழுதிக் கொடுத்தனரே. 34

வற்றாப்பளை முதலாய் வண்ணமயில் எழுந்தருளும்
வித்தாரக் கோயில் எல்லாம் விளக்கு வைத்து பொங்கலிட்டு
நற்றாயின் காவியத்தை நலம் பெறவே தாம்பாடி
முற்றாவினை மாற்றி (ஜீவ) முத்தர்களாய் மேவினரே. 35

அன்பர்க் கருள் புரியும் ஆத்தாளின் காவியத்தை
இன்புடனே ஆலயத்தில் இருவராய் தாமமர்ந்து
துன்பகல வைகாசிப் பொங்கல் தினம் வரையும்
பண்புடனே பாடிடுவோர் பத்தினியார் பதம் சேர்வார். 36

அதிசய/ அற்புத சருக்கம் முற்றிற்று.

## வணங்கு சருக்கம்

வந்த வைகாசி மாதம் வளர்ந்திடு பூரணைக்கு
முந்திய திங்கள் நாளில் முறைமையில் விளக்குவைத்து
நந்தமைக் காக்கும் நங்கை நல்லருள் தாயின் கோயில்
பந்தல்களிட்டு கட்டி பாங்குடன் அலங்கரித்து 1

மேற்கட்டி விதானம் சேர்த்து விளங்கு தோரணங்கள் தூக்கி
சாற்று பால் இளநீர் தேனும் சாருமுக்கனியும் பாகும்
ஊற்றியே அபிடேகித்து உலர்த்தி பூமாலை சாத்தி
ஏற்றியே தீபதூபம் இறைவிக்கு பூசை செய்வர்

2

குணமான கண்ணகையை கோவலனார் எனத் தொடங்கும்
தினமதிலே காப்போடு சேயிளையின் காவியத்தை
முனமதிலே இருபேர்கள் முறையாகத் தான் படிக்க
மனமுருகி மற்றோர்கள் மகிழ்ந்து கேட்டிருந்திடுவார்.

3

வெடியரசன் போர்முடித்து விழங்கு வெள்ளிக்கிழமையினில்
கொடியிடைக்கு கலியாணம் கூடிவரும் ஞாயிறன்று
நடமாது மாதவியின் நடனங்கள் தான் படித்து
விடி திங்கள் சிலம்போடு விரிவழக்கும் கூறுவரே.

4

பூரணையாம் திங்கள் தன்னில் பொலிவான பொங்கல் செய்து
நாயகிக்கு தான்படைத்து நண்ணி நின்று பூசை செய்து
காரணியே குளிருமென கையேட்டில் தாம்பாடி
நாரணியைத் தொழுதேத்தி நலம் பெற்றிருப்பாரே.

5

எட்டு நாள் விரதமதை இசை விருப்போடு நோற்று
கிட்டு பங்குனியின் திங்கள் சித்திரைப் பூரணையும்
மட்டில் ஒன்பது நாள் நோன்பும் மகிழ் ஆடிப்பூர நாளும்
விட்டானி உத்தரமும் விரும்பி நோற்றிடுவராமே.

6

பாண்டியன் மகள் போலாகி பதி பொன்னி நாட்டளாகி
நீண்டமானாகன் சேயாய் நிறைந்த காற் சிலம்பு சூட்டி
மாண்டிட மதுரைதீய மன்னனும் மனையும் மாழ
தாண்டவ தெய்வமான தாயினை பணிதல் செய்வாம். 7

வேறு

கற்பென்னும் கனலாலே கயவர் தனைத் தீய்த்து
காவியமாய் கண்ணகியாய் தெய்வமாகி
வற்றாப்பளைமேவி வடிவு காட்டி
வணங்கு தலம் தோறுமே வந்து சேர்ந்து
பற்று வெற்றி வேலனுக்கு பாடல் ஊட்டி
பத்தினியாய் பராபரையாய் பணிந்த அன்பர்
வற்றாத அருள்சுரக்கும் வாரியான
வண்ணமயில் பொற்பாதம் வணங்குவோமே. 8

- வணங்கு சருக்கம் முற்றிற்று -

## வாழ்த்துச் சருக்கம்

கண்ணகி அடியார் வாழ்க காவியத் தமிழும் வாழ்க
மண்ணகம் மாரி பெய்து வளம்சிறந்தென்றும் வாழ்க
விண்ணகம் பரவு சீர்த்தி வேல்விழி அம்மை மாலை
சொன்னவர் படிப்போர் கேட்போர் சுகம்பல பெற்று வாழி. 1

வெற்றியன் மரபு காக்கும் வியன்தமிழ் தெய்வ மாதின்
பற்றினின் பணிந்து பாடும் பாபயன் பகருவோர்கள்
நற்தவத் தாயின் பாதம் நன்னுவர் நலத்தின் மிக்க
கற்றவராகி நிற்க கண்ணகி தாயே காப்பாய். 2

கற்றா மனம் போல் கசிந்தெழுந்த கண்ணகையின்
சொற்காவிய மாலை சொற்றாரும் கேட்டாரும்
நற்றாயின் சேவடியில் நண்ணி எல்லாம் பெற்று
உற்றார் உவப்ப உயர்பதவி சேருவரே. 3

வேறு

மறையோடு மழை வாழி பசுக்கள் வாழி
 மன்னுசிவ சின்னம் அணி மதியோர் வாழி
பிறையேறும் பெருமானின் நெறியும் வாழி
 பெய்வளையாம் கண்ணகியார் பெருமை வாழி
துறையேறும் செந்தமிழும் துலங்கி வாழி
 தூய வெற்றிவேற்புலவன் இளங்கோ வாழி
நிறையேறும் தாயாரின் சரித மாலை
 நின்றிலங்க தூவிலுறை தாயே வாழி. 4

கண்ணகியம்மன் காவியமாலை முற்றுப்பெற்றது.

கண்ணகி அம்மன் திருவடிகள் வாழ்க
இளங்கோவடிகள் திருவடிகள் வாழ்க
வெற்றிவேற் புலவன் திருவடிகள் வாழ்க.

நன்றி வணக்கம்



## உயர்ந்த சமயப் பணியாளனே வாழ்க

காக்கும் தெய்வம் கண்ணகித் தாயின் வரலாறு, பெருமை, அற்புதங்களை கண்ணகியம்மன் காவிய மாலை என்னும் செய்யுள் நூலாக்கி நிறைவுசெய்துள்ள திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி (குடாநீரூரான்) அவர்களின் சமய, தமிழ் பற்றினை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

அரச சேவையில் உதவி அரசாங்க அதிபர், பிரதேச சபைச் செயலாளர் போன்ற உயர் பதவி வகித்த நூலாசிரியர், இதற்கு முன்பும் ஆவண, பொக்கிஷங்களாக திகழ்கின்ற நாகர்கோவில் நாகதம்பிரான் மான்மியம், புகழ்மாலை என புராண நூல்களை வெளியீடு செய்தமை இவரது சமயப் பணிக்குச் சான்றுகளாகும்.

இவரது சமய, சமூகப் பணிகள் மேலும் தொடர, சிறக்க, மேலோங்க எல்லாம் வல்ல கண்ணகித் தாயின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க இவர் சமயத் தொண்டு
வளர்க இவர் தமிழ்ப் பணி

அன்புடன்

**திரு. சி. சத்தியசீலன்**
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவர்கள் அமைச்சு,
வடக்கு மாகாணம்

06.09.2012